www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஏப்ரல் 2007
ரூ. 5.00









நக்சல்பாரி... நந்திகிராமம்...

# சி.பி.எம். கட்சியின் கொலைவெறி!

www.padippakam.com



## ''சிறு வணிகத்தை விழுங்க வரும்

# ரிலையன்ஸ், வால்மார்ட்டே வெளியேறு!''

## — புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்–ஆர்ப்பாட்டம்

**ப**ல இலட்சக்கணக்கான சிறு வியாபாரிகள் - விவசாயிகள் - தொழிலாளர்களின் வாழ்வை நாசமாக்கும் வகையில், சென்னையில் பல்லாயிரம் கோடி முதலீட்டில் 14 இடங்களில் காய்-கனி அங்காடிகளைத் தொடங்கியுள்ளதோடு, நகரின் மூலை முடுக்கெல்லாம் விரிவுபடுத்தி வருகிறது, ரிலையன்ஸ் குழுமம். இதன் விளைவாக கோயம்பேடு வணிக வளாகத்தின் விற்பனை இப்போதே 40% அளவுக்கு வீழ்ச்சியடைந்து விட்டது. கோயம்பேட்டை நம்பி வாழும் சுமார் ஒரு லட்சம் குடும்பங்களின் வாழ்க்கைக் கேள்விக்குறியாகி விட்டது.

எதிர்க்கட்சிகள் சித்தரிப்பதைப் போல, இது ஏதோ அரசின் தவறான கொள்கையால் ஏற்பட்டுள்ள பேரழிவு அல்ல. விவசாயம், சிறு தொழில்கள், சிறு வணிகம் முதலான எல்லாத் துறைகளையும் நாட்டின் இயற்கை வளங்களையும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் பிடியில் சிக்க வைத்து, நாட்டையே அடிமைப்படுத்தும் மறுகாலனியாக்கக் கொள்கைகள்.

கடந்த பத்தாண்டுகளாக தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற மறுகாலனியாதிக்கக் கொள்கைகளுக்கெதிராகத் தொடர்ந்து போராடி வரும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள், ரிலையன்ஸ் எதிர்ப்புப் போராட்டத்தை ஒட்டி மார்ச் 18 முதல் 23 வரை தொடர் பிரச்சார, ஆர்ப்பாட்டங்களில் இறங்கின. பல ஆயிரம் துண்டறிக்கைகள், நூற்றுக்கணக்கான முழக்க அட்டைகள், ''சிறு வணிகத்தை விழுங்கவரும் ரிலையன்ஸ், வால்மார்ட்டே வெளியேறு!'' என்ற சிறுவெளியீடு ஆகியன களத்தில் குவிந்தன.

செங்கொடிகளோடு தோழர்கள் கோயம்பேடு வணிக வளாகத்தைச் சுற்றி 10 கி.மீ. சுற்றளவில் பரவியிருக்கும் ஏழைக் குடியிருப்புகளில் துடிப்போடு பிரச்சாரம் செய்த போது, மக்கள் ஆதரித்தும் நன்கொடைகள் தந்தும் வரவேற்றனர். அருகே இருந்த மத்தியதர வர்க்க அடுக்ககங்களில் மட்டும் 'ரிலையன்ஸ் ஃபிரெஷ்' விரித்துவரும் பொய்யான விளம்பரங்கள் ஊடுருவி இருப்பதை அறிந்த தோழர்கள், அவர்களிடம் உண்மைகளை எடுத்துச் சொல்லிப் போராடக் கற்றுக் கொடுத்தனர்.

20,21 (மார்ச்) ஆகிய இரு நாட்களிலும் கோயம்பேடு வளாகத்திற்குள் 18 இடங்களில் பிரச்சாரம் செய்தது ம.க.இ.க. மையக் கலைக்குழு - 'ஓரம் ஓரம் ஓரம்' பாடல் பிறந்த களம் அதுதான். சிறு நாடகங்கள், பாடல் - ஆடல் மூலம் பல்லாயிரம் உழைப்பாளர்கள் மற்றும் வியாபாரிகளின் நெஞ்சங்களில் கனன்ற போராட்டத் தீயை வேகமாகப் பரப்பியது அக்கலைக்குழு.

கோயம்பேடு வட்டாரம் தவிர, சென்னை தாம்பரம் முதல் வள்ளலார் நகர் உள்ளிட்ட நகரப் பேருந்து நிலையங்களிலும்; பல பேருந்து நிலையங்களிலும், மின்சார ரயில்களிலும் ரிலையன்ஸ் எதிர்ப்புப் பிரச்சாரத்தை எடுத்துச் சென்ற இப்புரட்சிகர அமைப்புகள், போராடும் மக்களின் நம்பிக்கைக்கு உரமாய், ரிலையன்ஸின் பொய்ப் பிரச்சாரங்களுக்கு ஆப்பறையும் வகையில் புரட்சிகர கலைநிகழ்ச்சியுடன் பொதுக் கூட்டத்தை மார்ச் 21 அன்று மாலை கோயம்பேடு சந்தை அருகே பிருந்தாவன் நகர்த் திடலில் நடத்தின.

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 22**

**இதழ் 6**

ஏப்ரல் 2007

**உள்நாடு**
**தனிஇதழ்: ரூ.5.00**
**ஆண்டுசந்தா: ரூ.60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**



புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(ஆ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


# *கிரிக்கெட்:* வெறும் விளையாட்டல்ல, ஒழிக்கப்பட வேண்டிய சூதாட்டம்-சமூகக்கேடு!

2007 உலகக் கோப்பை கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகளில், இந்தியாவும் பாகிஸ்தானும் முதல் சுற்றிலேயே கற்றுக்குட்டி நாடுகளாக மதிப்பிடப்பட்ட வங்கதேசம் மற்றும் அயர்லாந்து ஆகிய அணிகளிடம் படுதோல்வி அடைந்து வெளியேற்றப்பட்டதும், கூடவே பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் பாப் உல்மரின் கொலையும் கிரிக்கெட் விளையாட்டைச் சுற்றிலும் எழுப்பப்பட்டிருந்த பல மாயத் தோற்றங்களைக் கலைத்திருக்கின்றன. கிரிக்கெட்டில் இந்திய அணி வெற்றி பெற்றால் தெருக்களில் பட்டாசுகள் கொளுத்தி இனிப்பு வழங்கிக் கொண்டாடுவதையும், தோல்வியடைந்தால் போதையேற்றிக் கொண்டு கவிழ்ந்து படுத்துவிடுவதையும் வழக்கமாகக் கொண்ட இந்திய ரசிகர்கள், வங்கதேசத்திடமும், இலங்கையிடமும் தோல்வி அடைந்தவுடன் தன்னெழுச்சியாக ஆத்திரங்கொண்டு கிரிக்கெட் வீரர்களின் உருவபொம்மைகளைக் கொளுத்தினார்கள்; உருவப்படங்களைச் செருப்பால் அடித்து, கிழித்துப் போட்டு அவமானப்படுத்தினார்கள்; கழுதைகளுக்கு கிரிக்கெட் வீரர்களின் பெயர்களைச் சூட்டி மாலை போட்டுத் தெருத்தெருவாக இழுத்து வந்தார்கள்; பாடைகள் கட்டியும், மொட்டையடித்தும் கருமாதிச் சடங்குகள் செய்தார்கள்; அவர்களின் வீடுகளைத் தாக்கினார்கள்.

இதே கிரிக்கெட் ரசிகர்கள்தாம் உலகக் கோப்பை போட்டிகள் தொடங்குமுன்பு இந்திய அணியின் வெற்றிக்காக யாகங்கள், சிறப்புப் பூசைகள், பிரார்த்தனைக் கூட்டங்கள், கூட்டு வழிபாடுகள் நடத்தினார்கள். ''கிரிக்கெட் விநாயகர்'' கோவில் கட்டி பஜனைப் பாடல்களும், சுலோகங்களும் இயற்றிக் குறுந்தகடுகளும் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தக் கேலிக் கூத்துக்களில் பார்ப்பன அர்ச்சகர்களும் இந்து மதவெறி அமைப்புகளின் பிரமுகர்களும் ஆர்வமுடன் பங்கேற்றனர். ''பாப் உல்மரின் கொலைச் சம்பவம் சர்வதேச கிரிக்கெட்டின் இருண்ட, அசிங்கமான பகுதியையும், நவீன கிரிக்கெட்டில் புழங்கும் மிகையான பணத்தையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றன. இந்தியா, பாகிஸ்தான், தென் ஆப்பிரிக்க அணி வீரர்கள் வர்த்தகச் சூதாடிகளுடன் கூட்டுச் சேர்ந்து கிரிக்கெட் ஊழலில் ஈடுபட்டிருப்பது ஏற்கெனவே அம்பலமாகியுள்ளன. இந்த நாடுகளின் கிரிக்கெட் ரசிகர்களிடையே நிலவும் மன நோய் - வெறித்தனம் காரணமாக மற்ற பிற விளையாட்டுகள் போன்ற ஒரு விளையாட்டாக கிரிக்கெட் மதிக்கப்படுவதற்குப் பதில் மிகையான கவர்ச்சியூட்டப்பட்டு விட்டது'' என்று செய்தி ஊடகங்கள் இப்போது நீலிக் கண்ணீர் வடிக்கின்றன.

கிரிக்கெட் மீது பெரும்பாலான ரசிகர்களிடையே மனநோய் - வெறித்தனம் கொள்ளுமளவு மிகையான கவர்ச்சி ஏற்படுவதற்கு என்ன காரணம், யார் பொறுப்பு என்பதைப் பற்றி இந்தச் செய்தி ஊடகங்கள் மவுனம் சாதிக்கின்றன. ''விளையாட்டை விளையாட்டாக எடுத்துக் கொள்ள வேண்டும்; விளையாட்டுப் போட்டிகளில் ஏற்படும் வெற்றி-தோல்விகளைத் தனிப்பட்ட பகையாக மாற்றி விடக்கூடாது; விளையாட்டுக்களில் வெற்றி முக்கியமில்லை, பங்கேற்பதுதான் முதன்மையானதாக இருக்க வேண்டும்'' என்று ஒருபுறம் உபதேசிக்கப்பட்டாலும் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் கிரிக்கெட் தேசியச் சின்னமாக மாற்றப்பட்டு, தேசிய வெறியூட்டப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இந்தியாவில் இந்து தேசியவெறியின் அடையாளமாக மாற்றப்பட்டிருக்கிறது. இந்தியாவுடன் பாகிஸ்தான் மோதினால் மட்டுமல்ல, வேறெந்த நாட்டோடு பாகிஸ்தான் மோதினாலும் பாகிஸ்தானின் தோல்வியைக் கொண்டாடும் அளவுக்கு இந்தியாவில் ''தேசிய'' வெறியேற்றப்பட்டு இருக்கிறது; இதே நிலைதான் பாகிஸ்தானிலும் உள்ளது. அதாவது, இந்தியாவின் தோல்வியை அவர்கள் கொண்டாடுவதாக உள்ளது.

சினிமாவுக்கு அடுத்து கவர்ச்சிகரமானதாக கிரிக்கெட் மாற்றப்பட்டிருக்கும் அதே சமயம், சினிமாவைவிட அதிகமாகப் பணம் புரளும், பணம் கொழிக்கும் மையமாக கிரிக்கெட் விளையாட்டு மாறியிருக்கிறது. கிரிக்கெட் போட்டிகளை நடத்தும் ஊழல்கள் நிறைந்த வெவ்வேறு நாடுகளின் வாரியங்கள் ஆண்டுக்குப் பல ஆயிரம் கோடி ரூபாய் சம்பாதிக்கின்றன. கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் ஒவ்வொரு போட்டியிலும் பல இலட்சம் ரூபாய் சம்பளம் பெறுகிறார்கள், கூடுதலாக விளம்பரங்களில் தோன்றி கோடிக்கணக்கில் ஊதியம் பெறுகிறார்கள். இவை போதாதென்று கிரிக்கெட் சூதாடிகளுடனும், தரகர்களுடனும் கூட்டுச் சேர்ந்து கொள்ளையடிப்பதோடு, உல்லாச - சொகுசு வாழ்க்கை, வசதிகளையும் பெறுகிறார்கள். கிரிக்கெட் போட்டி முடிவுகள் மீது பந்தயம் கட்டும் சூதாட்டத்தில் மட்டும் ஆண்டுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் பணம் புரளுகிறது. கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகளை ஒலி-ஒளி பரப்புவதும், அவற்றுக்கிடையே விளம்பரங்கள் செய்வதுமாக பல ஆயிரம் கோடி ரூபாய் பணம்

படிப்பகம்

www.padippakam.com

## நக்சல்பாரி... நந்திகிராமம்...

# சி.பி.எம். கட்சியின் கொலைவெறி!

உழைக்கும் மக்களின் கட்சி என்று புளுகிக் கொண்டு மே.வங்கத்தை ஆளும் சி.பி.எம். கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி அல்ல; கார்ப்பரேட் கட்சி. அது மார்க்சிஸ்ட் கட்சி அல்ல; பாசிஸ்ட் கட்சி. கடந்த மார்ச் 14-ஆம் தேதியன்று மே.வங்கத்தின் நந்திகிராமத்தில் போலீசும்-சி.பி.எம்.மும் இணைந்து நடத்திய பாசிசக் கொலைவெறியாட்டம் இந்த உண்மைகளை மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது.

**நந்திகிராமத்தில் நடந்தது என்ன?**

மே.வங்கத்தில் ஹால்டியா வட்டாரத்தில் 14,500 ஏக்கர் பரப்பளவில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவப் போவதாக 'இடதுசாரி' அரசு அறிவித்துள்ளது. இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காக விளைநிலங்களை இழக்கப் போகும் கிராமங்களில் ஒன்றுதான் நந்திகிராமம். விளைநிலங்களை ஆக்கிரமித்து விவசாயிகளின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கு எதிராக கடந்த 6 மாதங்களாக நக்சல்பாரி புரட்சியாளர்கள் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு, விவசாயிகளை அணிதிரட்டி வந்தார்கள்.

இதைக் கண்டு ஆத்திரமடைந்த சி.பி.எம். குண்டர்கள், ஜனவரி 6-ஆம் நாளன்று அதிகாலையில் 250 பேருக்கும் மேலாகத் திரண்டு வந்து நந்திகிராமம், சோனாசுரா கிராம மக்கள் மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தியதோடு, நாட்டுத் துப்பாக்கியால் கண்டபடி சுட்டனர். இப்பயங்கரவாதத் தாக்குதலில் 6 விவசாயிகள் கோரமாகக் கொல்லப்பட்டு, பலர் படுகாயமடைந்தனர். இதனால் ஆத்திரமடைந்த நந்திகிராம வட்டார விவசாயிகள், கொலைகார சி.பி.எம். கட்சிக் கிளை அலுவலகங்களைத் தீயிட்டுக் கொளுத்தி, சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த துரோகிகளையும், ஆள்காட்டிகளையும் கிராமத்தைவிட்டே வெளியேற்றினர். அதன்பிறகு, விவசாயிகளின் ஒப்புதலோடு மட்டுமே நிலங்கள் கையகப்படுத்தப்படும் என்றும் வீண் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் மே.வங்க முதல்வர் அறிவித்தார்.

விவசாயிகளின் ஒப்புதலோடு நிலம் கையகப்படுத்தப்படுமா, ஒப்புதல் இல்லாமல் பறிமுதல் செய்யப்படுமா என்பதல்ல பிரச்சினை. நந்திகிராம வட்டாரத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவும் திட்டம் கைவிடப்படுமா, இல்லையா என்பதுதான் விவசாயிக்ளின் கேள்வி. இதற்கு எந்த விளக்கமும் தராமல், சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவும் வெறியோடு சி.பி.எம். ஆட்சியாளர்கள் முனைப்பாகச் செயல்பட்டதால், விவசாயிகள் நந்திகிராமத்துக்கு வரும் சாலைகள் - பாலங்களைத் துண்டித்து போராட்டத்தைத் தொடர்ந்தனர். இப்பகுதியில் அரசு நிர்வாகம் முற்றாகச் செயலிழந்து முடமாகிப் போனது.

சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவி தரகுப் பெருமுதலாளிகளுக்கும் பன்னாட்டு ஏகபோக முதலாளிகளுக்கும் சேவை செய்ய முடியாமல் நந்திகிராம மக்கள் தடையாக நிற்பதைக் கண்டு ஆத்திரமடைந்த முதல்வர் புத்ததேவ், "நந்திகிராமத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து விட்டது" என்று புலம்பி, விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எச்சரித்தார். மே.வங்க அரசும் மாவட்ட நிர்வாகமும் இடதுசாரிக் கூட்டணிக் கட்சிகளின் பிரதிநிதிகளை வைத்து நந்திகிராமத்தில் சிவில் நிர்வாகம் மீட்கப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றின. "நந்திகிராம அராஜகத்தை இனிமேலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது; அவர்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவோம்" என்று மார்ச் 11-ஆம் நாளன்று சி.பி.எம். கட்சி ஏற்பாடு செய்திருந்த விவசாயிகள் பேரணியில் புத்ததேவ் கொக்கரித்தார்.

பாசிச முதல்வர் புத்ததேவின் கொலைவெறி பிடித்த இந்த வார்த்தைகள், மார்ச் 14-ஆம் நாளன்று போலீசு மற்றும் சி.பி.எம். குண்டர்களின் கொலைவெறியாட்டமாக மாறியது. 5000-க்கும் மேற்பட்ட போலீசார் துப்பாக்கிகள் - வெடிகுண்டுகளுடன் 2000 பேர் கொண்ட நந்திகிராம வட்டாரத்தைச் சுற்றி வளைத்து எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி நிராயுதபாணியான விவசாயிகள் மீது கண்மூடித்தனமாக 67 ரவுண்டுகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். போலீசு சீருடை அணிந்து கொண்டு, அவர்களோடு சேர்ந்து வந்த 250-க்கும் மேற்பட்ட சி.பி.எம். குண்டர்கள் நாட்டுத் துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், கோடாரியோடு நந்திகிராம மக்கள் மீது கொலைவெறியாட்டம் போட்டனர். போலீசார் பூட்ஸ் அணிந்திருக்க,

சி.பி.எம். கட்சியின் பாசிச கொலைவெறியாட்டத்துக்கு எதிராக கொல்கத்தாவில் எதிர்க்கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்டம்.



www.padippakam.com

சி.பி.எம். குண்டர்கள் சாதாரண செருப்புடன், சீருடையில் அரசு இலச்சினை இன்றி தாக்குதல் நடத்தியதை நந்திகிராம மக்கள் அனைத்துப் பத்திரிகைகள்-தொலைகாட்சி நிறுவனங்களிடம் சாட்சியமளித்துள்ளனர். நந்திகிராம மக்களைக் கொன்றொழிக்கும் வெறியோடு இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. ஏனெனில், கொல்லப்பட்டவர்கள் அனைவரும் முதுகு, வயிறு, நெஞ்சு, தலைப்பகுதியில் குண்டடிப்பட்டு மாண்டு போயுள்ளார்களே தவிர, முழங்காலுக்குக் கீழாகக் குண்டுக் காயம்பட்டவர்கள் ஒருவர் கூட இல்லை.

நந்திகிராமத்துக்குச் சென்று கொலைவெறியாட்டம் போட்ட போலீசிடம் .303, .672 ரக குண்டுகளே துப்பாக்கியுடன் அளிக்கப்பட்டிருந்தன. ஆனால் மாண்டுபோன விவசாயிகளின் பிரேதப் பரிசோதனையில், பலரது உடலில் .315, .38 ரக குண்டுகள் பாய்ந்துள்ளதைக் கண்டு மருத்துவர்களே அதிர்ச்சியடைந்துள்ளனர். சி.பி.எம். குண்டர்கள் கள்ளத் துப்பாக்கியால் நந்திகிராம மக்களைச் சுட்டுக் கொன்று வெறியாட்டம் போட்டுள்ளதற்கு இதுவொன்றே இரத்த சாட்சியாக உள்ளது.



பத்திரிகையாளர்களை நந்திகிராமத்துக்குள் நுழைய விடாமல் தடுத்து மறியல் போராட்டம் நடத்தும் சி.பி.எம். குண்டர்கள்.

சி.பி.எம். குண்டர்கள் நந்திகிராமம் அருகேயுள்ள தெஹாலி கிராம பாலத்தை ஒட்டியுள்ள ஜனனி செங்கற் சூளையில் ஆயுதங்கள், துப்பாக்கிகள், வெடிமருந்துகளைப் பதுக்கி வைத்துக் கொண்டு அங்கிருந்து தாக்குதலை நடத்தியுள்ளனர். கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டுவதற்காக கொல்லப்பட்டவர்களை சாக்குத் துணியில் போட்டுத் தரதரவெனப் பிணங்களை அவசரமாக இழுத்துச் சென்று செங்கற்சூளையில் போட்டு சி.பி.எம். குண்டர்கள் எரித்துள்ளனர். கொலைவெறியாட்டம் நடந்த களத்திலிருந்து செங்கற்சூளை வரை தரையெங்கும் தெறித்துக் கிடந்த இரத்தக் கறைகளே இக்கொடூரத்தை நிரூபித்துக் காட்டுகின்றன.

மையப் புலனாய்வுத் துறையின் (CBI) ஆரம்ப விசாரணையிலேயே இவை அனைத்தும் நிரூபிக்கப்பட்டுள்ளதோடு, அச்செங்கற் சூளையிலிருந்து ஆயுதங்கள், வெடிகுண்டுகள், துப்பாக்கிகள், போலீசு சீருடை, இரும்புத் தொப்பி, சி.பி.எம். கட்சிக் கொடிகள், சி.பி.எம். கட்சியின் இளைஞர் அமைப்பான டை.ஃபி (DYFI) யின் பிரசுரங்கள் - கொடிகள், நந்திகிராம வீடுகள் - தெருக்களின் வரைபடம் முதலானவையும் மையப் புலனாய்வுத் துறையால் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தவிர, மரங்களிலும், புதர்களிலும் சி.பி.எம். குண்டர்களால் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகளும், இரத்தக்கறை படிந்த சாக்குத் துணிகளும் கைப்பற்றப்பட்டு, 10 சி.பி.எம். குண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நந்திகிராமத்தில் நடந்த போலீசு - சி.பி.எம். குண்டர்களின் கொலை வெறியாட்டத்தில் மாண்டு போனவர்களின் எண்ணிக்கை 14 தான் என்கிறது அரசு. ஆனால் நந்திகிராம வட்டாரத்தில் பலர் 'காணாமல்' போயுள்ளனர். இதுதவிர, சி.பி.எம். குண்டர்கள் செங்கற்சூளையில் எரித்துக் கொன்றவர்களின் எண்ணிக்கை இன்னமும் வெளியே வரவில்லை.

இந்தப் பயங்கரவாத வெறியாட்டங்களையெல்லாம் விஞ்சும் வகையில் சி.பி.எம். குண்டர்கள் நந்திகிராமப் பெண்கள் மீது பாலியல் வன்முறையை ஏவியுள்ளதைக் கண்டு நாடே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது. நந்திகிராம கொலைவெறியாட்டத்தின் போது சாதாரண செருப்பு அணிந்து போலீசு சீருடையில் வந்த சி.பி.எம் குண்டர்கள், பல பெண்களை துப்பாக்கி முனையில் மிரட்டிப் பாலியல் வன்முறையை ஏவியுள்ளனர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் இரு பெண்கள் அளித்துள்ள வாக்குமூலங்கள் பத்திரிகைகளில் வெளிவந்து நாடெங்கும் நாறுகிறது. இது தவிர, பாலியல் வன்முறையை ஏவிய ஒருவனை நந்திகிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண் அடையாளம் காட்ட, அவனைப் பிடித்து மக்கள் விசாரித்த போது, அவன், தான் சி.பி.எம். ஆதரவாளன் என்றும் சி.பி.எம். தலைவர்கள் சொன்னதாலேயே இப்படிச் செய்ததாகவும் பி.டி.ஐ. செய்தியாளர் முன்னிலையிலேயே வாக்குமூலம் அளித்துள்ளான்.

இத்தனை பயங்கரவாத வெறியாட்டங்களும் அடுத்தடுத்து அம்பலமாகியுள்ள போதிலும், மே.வங்க பாசிச முதல்வரான புத்ததேவ் இக்கொலை வெறியாட்டங்களுக்குக் கண்டனமோ, வருத்தமோ தெரிவிக்கவில்லை. அவரை முதல்வர் பதவியிலிருந்து விலக்க மாட்டோம் என்று அக்கொலைகார முதல்வரைப் பாதுகாக்கிறார், சி.பி.எம். கட்சியின் பொதுச் செயலாளரான கரத். ஆனால், மே.வங்கத்தின் பல்வேறு மனித உரிமை - ஜனநாயக உரிமை அமைப்புகளும், தொழிற்சங்க - விவசாயிகள் சங்கத்தினரும் எழுத்தாளர்களும் கலைஞர்களும் சி.பி.எம். கட்சி மீது காறி உமிழ்ந்துள்ளனர். மே.வங்க அரசின் கலாச்சார நிறுவமான பஸ்சிம்பங்கா பங்களா அகாடமியின் துணைத்தலைவரும் பிரபல கவிஞருமான சங்கா கோஷ் ''நந்திகிராமத்தில் நடந்திருப்பது சி.பி.எம். கட்சி மற்றும் அரசின் பயங்கர வெறியாட்டம்; இதற்கு மேலும் நாங்கள் அரசாங்கப் பதவியில் நீடிப்பது அவமானம்'' என்று அறிவித்து இந்த அகாடமியின் நிர்வாக்க் குழு உறுப்பினர்களோடு பதவி விலகியுள்ளார். உழைக்கும் மக்களிடமும் அறிவுத்துறையினரிடமும் முற்றாக அம்பலப்பட்டு தனிமைப்பட்

www.padippakam.com

கார ஆட்சியை 'துக்ளக்' சோ போன்ற பாசிஸ்டுகள் மட்டுமே ஆதரிக்கின்றனர்.

இவற்றையெல்லாம் மூடி மறைத்துவிட்டு கோயபல்சு வழியில் அண்டப் புளுகை அவிழ்த்து விட்டு, நியாயவாதங்களை அடுக்கித் தமது பாசிச கொலைவெறியாட்டங்களை மூடி மறைக்கக் கிளம்பியுள்ளது சி.பி.எம். கட்சி.

"கடந்த இரண்டரை மாதங்களாக நந்திகிராமத்தில் அரசு எந்திரமே செயல்பட முடியவில்லை. அது வன்முறையாளர்கள் - தீவிரவாதிகளின் 'சுதந்திர' ராஜ்ஜியமாகவே இருந்தது. இடதுசாரி அரசாங்கம் மட்டுமல்ல; வேறெந்த அரசாங்கமும் இத்தகைய நிலைமையைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. எனவேதான் சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டவும், வன்முறைச் சக்திகளால் நாசமாக்கப்பட்டுள்ள சாலைகள் - பாலங்களைச் சீரமைக்கவும் அங்கு போலீசு அனுப்பப்பட்டது" என்று நியாயவாதம் பேசுகிறார் மே.வங்க பாசிச முதல்வர்.

எல்லா ஆட்சியாளர்களையும் போலவே, போராட்டம் என்றாலே சட்டம் - ஒழுங்கு கெட்டுவிட்டது என்று ஒப்பாரி வைக்கிறார் புத்ததேவ். யாருக்கான சட்டம் - ஒழுங்கு என்பதுதான் கேள்வி. இந்தச் சட்டம் - ஒழுங்கு உழைக்கும் மக்களுக்கானதா? அல்லது இந்தோனேஷியாவில் கம்யூனிஸ்டுகளை நரவேட்டையாடிய பாசிச சுகர்தோவின் கூட்டாளியான சலீம் குழுமம், நந்திகிராம விளைநிலங்களைக் கைப்பற்றி சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் பெயரில் பகற்கொள்ளை அடிப்பதற்கா? இது ஒருபுறமிருக்கட்டும்.

நந்திகிராம மக்கள் கடந்த இரண்டரை மாதங்களாக சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவப்படுவதற்கு எதிராகப் போராடிவரும் நிலையில், அங்கு சாலைகள் - பாலங்களைச் சீரமைக்க பொதுப்பணித்துறை ஊழியர்களை அனுப்பாமல் 5000-க்கும் மேற்பட்ட போலீசாரை அனுப்பியது ஏன்? அவர்கள் கொலைவெறித் தாக்குதல் நடத்த அனுப்பப்பட்டார்களா? அல்லது துப்பாக்கிகளையும் குண்டுகளையும் வைத்து சாலைபோடச் சென்றார்களா?

"நந்திகிராமத்தினுள் போலீசு நுழைய முற்பட்டதும் வன்முறையாளர்கள் கற்களை வீசி போலீசு மீது தாக்குதல் நடத்தினர்; மரங்களின் மீதேறிக் கொண்டு நாட்டுத் துப்பாக்கியால் சுட்டனர்; நாட்டு வெடிகுண்டுகளை வீசினர்" என்று குற்றம் சாட்டுகிறது சி.பி.எம். கட்சியின் அதிகாரபூர்வ ஆங்கில வார ஏடான "பீப்பிள்ஸ் டெமாக்கிரசி". இது உண்மையென்றால், காயம்பட்ட ஒரு போலீசுக்காரனைக் கூட அக்கட்சியினரோ, 'இடதுசாரி' அரசாங்கமோ இதுவரை காட்ட முடியவில்லையே, அது ஏன்? போலியாக மாவுகட்டு போட்டுக் கொண்டு போட்டோவுக்கு "போஸ்" கொடுக்கும் போலீசுக்காரனைக் கூட இதுவரை காட்டவில்லையே! அப்புறம் எந்த போலீசுக்காரர்கள் காயமடைந்தார்கள்?

நந்திகிராம மக்களை சமூக விரோதிகள், வன்முறையாளர் என்றெல்லாம் குற்றம் சாட்டுகிறது சி.பி.எம் கட்சி. நந்திகிராமத்தில் போலீசு கொலைவெறியாட்டம் போட்டு, பின்னர் அங்கு முகாம் அமைத்துள்ள போதிலும் இதுவரை நந்திகிராமத்தில் ஒரு வன்முறையாளர் கூட கைது செய்யப்படவில்லையே, அது ஏன்? அந்த வன்முறையாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்களா அல்லது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் குண்டடிப்பட்ட உழைக்கும் மக்கள் வன்முறையாளர்களா?

"நந்திகிராமத்தில் போலீசு நுழைந்ததும் அக்கிராம மக்கள் கல்லெறிந்து தாக்குதல் நடத்தினர். போலீசார் கண்ணீர்புகை வீசியும், ரப்பர் தோட்டாக்களைக் கொண்டு துப்பாக்கியால் சுட்டும்

## நந்திகிராமப் படுகொலை:

# கொலைகார புத்ததேவின் கொடும்பாவி எரிப்பு!

டாடா மற்றும் பன்னாட்டு ஏகபோக முதலாளிகளின் இலாப வேட்டைக்காக சொந்த மக்களையே கொன்று குவிக்கும் சிவப்புக் காட்டேரிகளான சி.பி.எம். கட்சியை எதிர்த்தும், அது மார்க்சிஸ்டு கட்சி அல்ல; பாசிஸ்டு கட்சிதான் என்பதை உழைக்கும் மக்களிடம் அம்பலப்படுத்தியும் நந்திகிராமத்தில் விவசாயிகள் படுகொலை செய்யப்பட்ட மறுநாளிலேயே தமிழகமெங்கும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் விரிவாகச் சுவரொட்டிகள் - தட்டிகள் மூலம் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டன. தஞ்சையில், ம.க.இ.க., பு.மா.இ.மு. அமைப்புகள் இணைந்து மே.வங்க பாசிச முதல்வரான கொலைகார புத்ததேவின் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை மார்ச் 17-ஆம் நாளன்று நடத்தின. தஞ்சை பழைய பேருந்து நிலையம் எதிரே, தோழர் அருள் தலைமையில் செங்கொடி ஏந்தி விண்ணதிரும் முழக்கங்களுடன் வந்த தோழர்கள், போலீசு தடைகளையும் மீறி கொலைகார புத்ததேவின் கொடும்பாவியைத் தீயிட்டுக் கொளுத்தினர். பரபரப்பான காலை நேரத்தில் போலி கம்யூனிசக் கொலைகாரர்களை எதிர்த்து, திரளான உழைக்கும் மக்கள் முன்னிலையில் நடந்த இக்கொடும்பாவி எரிப்புப் போராட்டம் நகரெங்கும் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. இப்போராட்டத்தில் ஈடுபட்ட முன்னணியாளர்கள் 8 பேரை போலீசு கைது செய்துள்ளது.



பாசிஸ்டுகளாகச் சீரழிந்துவிட்ட கொலைகார சி.பி.எம். கட்சியை அம்பலப்படுத்தியும், மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராகப் புரட்சிகர அமைப்புகளில் உழைக்கும் மக்கள் அணிதிரண்டு போராட அறைகூவியும் இவ்வமைப்புகள் தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

- பு.ஜ. செய்தியாளர்கள்

படிப்பகம்

www.padippakam.com

அக்கூட்டத்தைக் கலைத்தனர். மக்கள் கூட்டம் நாற்புறமும் சிதறி ஓடியது; அதன்பிறகு வன்முறையாளர்கள் திரண்டு வந்து நாட்டுத் துப்பாக்கியால் சுட்டு நாட்டு வெடிகுண்டுகளை வீசினர். இத்தாக்குதலுக்குப் பின்னரே போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்'' என்று நந்திகிராமத்தில் நடந்த சம்பவங்களை அங்குலம் அங்குலமாக விவரித்து, ''தவிர்க்கவியலாத நிலையிலேயே போலீசு துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று'' என்று நியாயவாதம் பேசுகிறது பாசிச சி.பி.எம். கட்சி.

கண்ணீர் புகை குண்டுக்கும் ரப்பர் தோட்டாக்களுக்குமே மக்கள் நாற்புறமும் சிதறி ஓடிவிட்டார்கள் என்றால், 5000-க்கும் மேற்பட்ட போலீசார் அதிநவீன துப்பாக்கிகள், வெடிகுண்டுகளுடன் நந்திகிராமத்துக்குச் சென்றது ஏன்? வன்முறையாளர்கள் நாட்டுத் துப்பாக்கியால் சுட்டனர் என்பது உண்மையானால், அதிரடியாகத் தாக்குதல் நடத்திய போலீசு, இதுவரை ஒரு நாட்டுத் துப்பாக்கியைக் கூட கைப்பற்றவில்லையே, அது ஏன்? வீடுவீடாகச் சோதனை நடத்தியும் கூட, அந்த நாட்டுத் துப்பாக்கிகளும் நாட்டு வெடிகுண்டுகளும் மறைந்து போனதன் மர்மம் என்ன?

எல்லாவற்றுக்கும் மேலாக, நந்திகிராமத்தைச் சாராத வெளியிலிருந்து வந்த அன்னிய சக்திகள் நந்திகிராம மக்களிடம் பொய்ப் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்துவிட்டு வன்முறையைத் தூண்டியதாகக் குற்றம் சாட்டுகிறார் சி.பி.எம்.மின் பாசிசத் தளபதியான எச்சூரி. நந்திகிராமம் அமைதியாக இருந்ததாம்! வெளியிலிருந்து வந்த அன்னிய சக்திகளான மாவோயிஸ்டுகள்தான் பொய்ப் பிரச்சாரம் செய்து வன்முறையைத் தூண்டிவிட்டார்களாம் - இப்படி கதை எழுதுகிறது சி.பி.எம். கட்சியின் வார ஏடான பீப்பிள்ஸ் டெமாக்கரசி.

மறுகாலனியத் தாக்குதலின் ஒரு அங்கமான சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு எதிராக மக்களை அணிதிரட்டிப் போராடும் மாவோயிஸ்டுகள் அன்னிய சக்திகள், வன்முறையாளர்கள் என்கிறது பாசிச சி.பி.எம். கட்சி. அதாவது, வெளியூரைச் சேர்ந்தவர்கள் அரசியல் பிரச்சாரம் செய்யக்கூடாது; அவர்கள் அன்னிய சக்திகள் என்கிறது சி.பி.எம். கட்சி. அப்படியானால், தென்னகத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டுவதற்காக, காலனிய ஆட்சிக்காலத்தில் கட்சியால் பணிக்கப்பட்டு சென்னையில் பணியாற்றிய வடநாட்டைச் சேர்ந்த




தோழர் அமீதுஹைதர்கான், கம்யூனிஸ்ட் கட்சித் தோழரா அல்லது அன்னிய சக்தியா? கீழத்தஞ்சை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட கூலி-ஏழை விவசாயிகளைச் சவுக்கடியும் சாணிப்பாலும் கொடுத்து வதைத்த நிலப்பிரபுக்களின் கொட்டத்தை ஒடுக்கி, வர்க்கப் போராட்டத் தீயை மூட்டிய தோழர் சீனிவாசராவ், கம்யூனிஸ்ட் கட்சித் தோழரா, அல்லது அன்று நிலப்பிரபுக்கள் சித்தரித்ததைப் போல வெளியூரைச் சேர்ந்த வன்முறையாளரா? அவ்வளவு ஏன்? தமிழகத்தில் கட்சி மற்றும் தொழிற்சங்க வேலைகளில் ஈடுபட்ட வி.பி.சிந்தன், பி.ஆர். பரமேஸ்வரன், ரமணி, அரிபட் முதலானோர் சி.பி.எம். கட்சித் தோழர்களா? அல்லது அன்னிய சக்திகளா?

சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கு எதிராக விவசாயிகளை அணிதிரட்டிப் போராடி வரும் நக்சல்பாரி புரட்சியாளர்களை அன்னிய சக்திகள் என்று சாடும் சி.பி.எம். கட்சி, இந்தோனேஷிய சலீம் குழுமத்துக்காக 14,500 ஏக்கர் விளைநிலங்களைப் பறித்து தாரை வார்க்கக் கிளம்பியுள்ளதே, அந்த சலீம் குழுமம் அன்னிய பெருமுதலாளித்துவ சக்தியா, அல்லது சி.பி.எம். கட்சியின் தோழரா? அந்த அன்னிய சக்தியின் இலாபவெறிக்காக, அதுவும் இந்தோனேஷியாவில் கம்யூனிஸ்டுகளை நரவேட்டையாடிய பாசிச சுகார்தோ கும்பலின் கூட்டாளி நிறுவனமான சலீம் குழுமத்துக்காக விவசாயிகளையும் விளைநிலங்களையும் பலியிடும் சி.பி.எம். கட்சி இடதுசாரி கட்சியா? அல்லது ஏகபோக முதலாளிகளுக்கு அடியாள் வேலை செய்யும் பாசிசக் கட்சியா?

படிப்பகம்

சி.பி.எம். கட்சியானது, கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தால், ஆளும் வர்க்கக் கட்சிகளைப் போல இத்தகைய அபத்தவாதங்களை அடுக்காது. ஆனால் சி.பி.எம். கட்சியானது, கம்யூனிஸ்ட் கட்சி அல்ல; கார்ப்பரேட் கட்சி. அது மார்க்சிஸ்ட் கட்சி அல்ல; பாசிஸ்ட் கட்சி. எனவேதான் ஆளும் வர்க்கக் கட்சிகளை விஞ்சும் வண்ணம் தரகுப் பெருமுதலாளிகளுக்கும் பன்னாட்டு ஏகபோக முதலாளிகளுக்கும் விசுவாச அடியாளாக வேலை செய்து கொண்டு, பாசிச கோயபல்சையே விஞ்சும் வண்ணம் பொய்களையே நியாயவாதங்களாக அடுக்குகிறது.

இன்று நந்திகிராமத்தில் கொலை வெறியாட்டம் போட்ட இதே சி.பி.எம். கட்சியினர்தான், நாற்பதாண்டுகளுக்கு முன்பு இதே மே.வங்கத்தில் கிளர்ந்தெழுந்த நக்சல்பாரி பேரெழுச்சியையும் மிருகத்தனமாக ஒடுக்கி கொலைவெறியாட்டம் போட்டதோடு, நக்சல்பாரி கிராம விவசாயிகளையும் புரட்சியாளர்களையும் தீவிரவாதிகள், வன்முறையாளர்கள் என்று முத்திரை குத்தி அவதூறு செய்தனர். 1967-இல் நக்சல்பாரி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், ''ஜோத்திதார்கள்'' எனப்படும் நிலப்பிரபுக்களின் ஆதிக்கச் சுரண்டலுக்கு எதிராகப் போராடி, குத்தகை விவசாயிகளின் உரிமையை நிலைநாட்டியதோடு, நிலப்பிரபுக்களிடம் இருந்த விவசாயிகளின் கடன்பத்திரங்களைத் தீயிட்டுக் கொளுத்தி, தமது சொந்த அதிகாரத்தை நிறுவினர். வில்லும், அம்பும், கோடாரியும், துப்பாக்கியும் ஏந்திய விவசாயிகள், கிராம நிர்வாகத்தை இயக்குவதைக் கண்டஞ்சி நிலப்பிரபுக்களும்

தொடர்ச்சி 11-ஆம் பக்கம்

www.padippakam.com

## சில்லறை வணிகம்:

# மறுகாலனியாதிக்கத்தின் அடுத்த பலிகிடா

கிரிமினல் போர்ஜரி வேலைகள், திருட்டு, இலஞ்ச ஊழல் ஆகியவற்றின் மூலமாகவே குறுகிய காலத்தில் உலகப் பணக்காரனாகி விட்ட அம்பானி குடும்பத்தின் ரிலையன்ஸ் நிறுவனம், சென்னையில் 14 இடங்களில் காய்கனி அங்காடிகளைத் திறந்திருக்கிறது. சென்னை நகர மூலை முடுக்குகளிலெல்லாம் தனது அங்காடிகளை விரிவுபடுத்தவும் இருக்கிறது.

இதனால், சென்னை மாநகரத்திற்கும் அதன் சுற்றுவட்டாரங்களுக்கும் தேவையான காய்கனிகளை விநியோகித்து வரும் கோயம்பேடு வணிக வளாகத்தின் விற்பனை இப்பொழுதே 40% வீழ்ச்சி அடைந்து விட்டதாகக் குமுறுகிறார்கள் வியாபாரிகள். கோயம்பேட்டுக்கு வரும் சில்லறை வணிகர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது. அவர்கள் வாங்கும் சரக்கின் அளவு குறைந்துவிட்டது. வெளியூர் லாரிகளின் வரத்து குறைந்து விட்டது. தொழிலாளிகளுக்கு வேலை குறைந்து வருமானமும் குறைந்து விட்டது. கோயம்பேட்டை நம்பி வாழும் சுமார் ஒரு இலட்சம் குடும்பங்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகி விட்டது.

ஏற்கெனவே பான்டலூன் நிறுவனம் வடபழனியில் தொடங்கியிருக்கும் பிக் பஜார், ஆர்.பி.ஜி குழுமத்தின் ஸ்பென்சர் டெய்லி, ஜெர்மன் நிறுவனமான ஃபுட் வேர்ல்ட் போன்ற நிறுவனங்கள் சென்னை நகரின் பல இடங்களில் சில்லறை விற்பனைக் கடைகளைத் திறந்திருக்கின்றன. இன்னும் டாடா, பிர்லா போன்ற தரகு முதலாளிகளும் நாடெங்கும் சில்லறை விற்பனைக் கடைகளைத் திறக்க இருக்கிறார்கள். இதுவன்றி, அமெரிக்காவின் வால்மார்ட், ஜெர்மனியின் மெட்ரோ, பிரான்சின் காரஃபோர் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் சென்னை உள்ளிட்ட எல்லா நகரங்களிலும் பிரம்மாண்டமான சில்லறை விற்பனைக் கடைகளைத் திறக்கவிருக்கின்றன.

சென்னை நகரில் நாளொன்றுக்கு நடைபெறும் காய்கனி விற்பனையின் மொத்த மதிப்பு சுமார் 20 கோடி ரூபாய். இதை அப்படியே விழுங்கி விடத் துடிக்கிறது ரிலையன்ஸ் நிறுவனம். சில்லறை வணிகத்தில் உலகிலேயே நான்காம் இடத்தில் இருக்கிறது இந்தியா. ஆண்டொன்றுக்கு 12 இலட்சம் கோடி ரூபாய் புரளும் இந்தியாவின் சில்லறை விற்பனைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் 4 கோடிப் பேர். சுமார் 20 கோடிப் பேருக்குச் சோறு போடும் இந்தச் சில்லறை விற்பனைத் தொழில் முழுவதையும் விழுங்கி விடத் துடிக்கின்றன சில பன்னாட்டு நிறுவனங்கள்.

சென்னை நகரில் காய்கனி விநியோகத்துக்கு என்ன குறை? எல்லாப் பகுதிகளிலும் காய்கறி மார்க்கெட்டுகள் இருக்கின்றன. வீதிக்கு வீதி காய்கறிக் கடைகள் இருக்கின்றன. தெருவுக்குத் தெரு மளிகைக் கடைகள் இருக்கின்றன. தெருத் தெருவாகக் கூவி விற்க தள்ளுவண்டி வியாபாரிகளும் வீடு வீடாகக் கூடையில் சுமந்து சென்று விற்க பெண்களும் ஆயிரக்கணக்கான பேர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரையும் ஒழித்துவிட்டு அம்பானியைக் கொழுக்க வைக்க வேண்டுமென்று யார் கேட்டார்கள்?

''காய்கறி வாங்கினால் சர்க்கரை இலவசம்; 100 ரூபாய்க்கு காய் வாங்கினால் ஒரு டோக்கன்; தொடர்ந்து வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலவச வீட்டு டெலிவரி, 50,000 ரூபாய்க்கு ரிலையன்ஸ் விபத்துக் காப்பீடு'' என்று சலுகைகளை வாரி வழங்குகிறது, ரிலையன்ஸ். இதில் மயங்கி அங்கே வாடிக்கையாளர் கூட்டம் அலைமோதுகிறது.

சில்லறை வணிகத்தில் பன்னாட்டுக் கம்பெனிகளையும், அம்பானி, டாடா, பிர்லா போன்ற தரகு முதலாளிகளையும் அனுமதிப்பதன் மூலம் ''விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும். இடைத்தரகர்களை ஒழித்து விடுவதால் நுகர்பவர்களுக்கும் மலிவான விலையில் பொருள் கிடைக்கும்'' என்கிறார் நிதியமைச்சர் ப.சிதம்பரம்.

பொள்ளாச்சி சந்தையில் விவசாயியிடமிருந்து காய்கனிகளையும் தானியங்களையும் கொள்முதல் செய்யும் வியாபாரி முதல், அதைத் தள்ளுவண்டியில் போட்டு வேகாத வெயிலில் தெருத்தெருவாகக் கூவி விற்கும் தள்ளுவண்டிக்காரர் வரையில் எல்லோரும் இடைத்தரகர்களாம். இவர்களையெல்லாம் ஒழித்து விட வேண்டுமாம். இப்படி ''கோடிக்கணக்கான உழைக்கும் மக்களை ஒழித்துக் கட்டிவிட்டு வால்மார்ட்டையும் டாடா, பிர்லா, அம்பானியையும் வளர்த்துவிடுவதுதான் நாட்டுக்கு நல்லது'' என்று வெளிப்படையாக கூறும் ஒரு தேசத்துரோகி இந்த நாட்டுக்கு நிதியமைச்சராக இருக்கும்போது மக்கள் எப்படி வாழ முடியும்?

சில்லறை வணிகத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைந்தால் மற்ற கடைகளில் விற்பனை படுத்துவிடும் என்பது மட்டுமல்ல பிரச்சினை. கொள்முதல் சந்தைகள், மொத்தவிற்பனை, சில்லறை விற்பனை இவையெல்லாம் பொருளாதாரத்தின் ஒரு முனை. விவசாயம், நெசவு, தொழிற்சாலைகள் போன்ற உற்பத்தித் துறைகள் பொருளாதாரத்தின் மறுமுனை. ஒரு முனையைத் தன் பிடிக்குள் கொண்டு வருவதன் மூலம் பொருளாதாரத்தின் மறுமுனையான உற்பத்தித் துறை முழுவதையும் தம் வசப்படுத்திக் கொள்ள முயல்கின்றன பன்னாட்டு நிறுவனங்கள்.

### தானிய ஏகபோகத்தின் விளைவுதான் விலைவாசி உயர்வு!

பொருள் உற்பத்தி, கொள்முதல், சில்லறை விற்பனை ஆகியவற்றில் இன்று கோடிக்கணக்கான விவசாயிகளும், வியாபாரிகளும் ஈடுபட்டிருப்பதனால்தான் விலைவாசி ஓரளவுக்காவது கட்டுப்பாட்டில் இருக்கிறது. இவையனைத்தும் வால்மார்ட், கார்கில், ஐ.டி.சி., அம்பானி, டாடா, பிர்லா என 10, 20 முதலாளிகளின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிட்டால் என்ன நடக்கும்? பிறகு அவன் வைத்ததுதான் விலை. இன்று சிமெண்ட் முதலாளிகள் தமக்குள் பேசி வைத்துக் கொண்டு விலையை ஏற்றியிருப்பதைப் போலவே, நாளை அரிசி, கோதுமை, வெங்காயம், தக்காளி அனைத்திலும் இவர்கள் பகற்கொள்ளை அடிப்பார்கள்.

''சில்லறை விற்பனையில் வால்மார்ட்டும் ரிலையன்சும் நுழைந்தால்

www.padippakam.com



நுகர்வோருக்கு உலகத் தரம் வாய்ந்த பொருட்கள் மலிவான விலையில் கிடைக்கும், விவசாயிகளுக்கு முன் எப்போதும் கண்டிராத அளவுக்கு நியாய விலை கிடைக்கும்'' என்ற பேச்செல்லாம் முழுப்பொய். கத்தரிக்காய்க்கு நியாய விலை கொடுப்பதற்காகத்தான் 3000 கோடி ரூபாயை மடியில் கட்டிக் கொண்டு குஜராத்திலிருந்து வந்திருக்கிறானா அம்பானி? துணிக்கும் துடைப்பக் கட்டைக்கும் நல்ல விலை கொடுப்பதற்காகத்தான் வால்மார்ட் அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வருகிறதா?

நேற்று வரை காய்கனி வாங்கிய மார்க்கெட்டையும், காய்கறிக் கடையையும், மளிகைக் கடையையும் மறந்துவிட்டு, விளம்பரத்தையும், ஏ.சி. ஷோரூமையும் இலவசத் திட்டங்களையும், கண்டு மயங்கி இன்று 'ரிலையன்ஸ் ஃபிரஷ்' கடைக்குச் செல்லும் படித்த முட்டாள்களும் இதை நம்புகிறார்கள்.

### ஃபிரெஷ்ஷான புற்றுநோய்!

''பாக்கெட்டில் போடாமல் திறந்து வைத்திருக்கும் பொருளை வாங்காதீர்கள்'', ''ஈ மொய்க்கும் பொருளை வாங்காதீர்கள், சுத்தமான பொருளை வாங்குங்கள்'', ''பில் கொடுக்காத கடையில் பொருள் வாங்காதீர்கள்'' என்று சிறு வணிகர்களுக்கு எதிரான பிரச்சாரத்தை நயவஞ்சகமாகக் கட்டவிழ்த்து விடுகிறது அரசு. பில் போட்டு விற்க முடியாத சிறிய மளிகைக் கடைகள், சிறிய ஓட்டல்கள், தள்ளுவண்டி வியாபாரிகள் ஆகிய அனைவரையும் நுகர்வோரை ஏமாற்றும் கிரிமினல்கள் என்பதைப் போல வேண்டுமென்றே சித்தரிக்கிறது அரசு.

சிறுவணிகர்களைக் குற்றவாளிகளாகச் சித்தரிக்கும் பன்னாட்டு நிறுவனங்களின் யோக்கியதை என்ன? பளபளப்பான தாளில் பேக்கிங் செய்து விற்கப்படும் காட்பரீஸ் சாக்லெட்டிற்குள் புழு இருக்கிறதென்று பல ஊர்களிலிருந்து புகார் வந்து மகாராட்டிரா மாநிலம் முழுவதும் அதன் விற்பனை தடை செய்யப்படவில்லையா? கோக் பெப்சி பாட்டிலுக்குள் கரப்பான் பூச்சியும், பல்லியும், ஆணியும் கிடக்கவில்லையா? புற்று நோயை உருவாக்கும் பூச்சி மருந்துகள் அதில் கலந்திருப்பது நிரூபிக்கப்பட்ட பின்னரும் கோக்கும் பெப்சியும் விற்பனை செய்ய அனுமதிக்கப்படவில்லையா?

**எல்லா தொழில்களிலிருந்தும் துரத்தப்படும் பரிதாபத்துக்குரிய மக்கள் அனைவரும் கடைசியாக வந்து சேரும் புகலிடம்தான் சில்லறை வணிகம். இந்த பரிதாபத்துக்குரிய மக்களின் வயிற்றிலடித்து சொத்து சேர்க்கலாம் என்று ரிலையன்ஸ் முதலாளி நினைக்கிறான் என்றால் அவனை விடக் கொடூரமான கொலைகாரன் வேறு யாராவது இருக்க முடியுமா?**

கலர் கலரான ஜிகினாத்தாள் பாக்கெட்டுகளில் சரம் சரமாகக் கடைகளில் தொங்கும் 'லேஸ்' நொறுக்குத் தீனிகளில் கலந்திருப்பது என்ன? பல மாதங்கள் விற்காமல் கிடந்தாலும் காரல் வாடை வரக்கூடாது என்பதற்காக அதில் கலக்கப்படும் இரசாயனப் பொருட்கள் புற்று நோயை உண்டாக்கக் கூடியவை என்றும், அந்த நொறுக்குத் தீனிகளை வாங்கித் தின்னும் பள்ளிப் பிள்ளைகளுக்கு மாரடைப்பு வருவது உறுதி என்பதும் மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்ட உண்மையில்லையா?

### பில் போடாத அண்ணாச்சி! பில் போட்டுத் திருடும் அம்பானி!

பில் போட்டுக் கொடுத்துவிட்டால் நுகர்வோரின் நலன் எப்படிப் பாதுகாக்கப்படும்? ரிலையன்ஸ் தொலைபேசியின் வாடிக்கையாளர்கள் அமெரிக்காவுக்கும் லண்டனுக்கும் பேசிய அழைப்புகளுக்கு பல ஆயிரம் கோடி ரூபாயைப் பில் போட்டுத்தான் வசூலித்தார் அம்பானி. அரசு தொலைபேசியின் சேவையைப் பயன்படுத்தி இப்படி வாடிக்கையாளர்களிடம் கோடிக்கணக்கில் வசூலித்துவிட்டு, வெளிநாட்டு அழைப்புகளையெல்லாம் உள்ளூர் அழைப்புகள் என்று கணக்கெழுதி 1300 கோடி ரூபாய் மோசடியும் செய்தார். ஆயுள் தண்டனை வழங்க வேண்டிய இந்தக் கிரிமினல் குற்றம் நிரூபிக்கப்பட்ட பிறகும் முழுத்தொகையைக் கூட வசூலிக்காமல் கொஞ்சம் அபராதம் மட்டும் வாங்கிக் கொண்டு நண்பர் அம்பானியை 'மன்னித்து' விட்டுவிட்டார் அமைச்சர் தயாநிதி மாறன்.

சென்ற ஆண்டு ரிலையன்ஸ் மொபைல் நிறுவனம் அறிவித்த 'ஃபிலிம் தமாகா' என்ற பரிசுப் போட்டியில் கலந்து கொண்டு 8888 என்ற எண்ணுக்கு 6 ரூபாய் கட்டணம் செலுத்தி 6000 எஸ்.எம்.எஸ்.களை அனுப்பி, 36,000 ரூபாய் பில்லையும் கட்டிவிட்டு, ''இதுவரை போட்டியும் நடத்தவில்லை, யாருக்கும் பரிசும் கொடுக்கவில்லை'' என்று ரிலையன்ஸ் மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குப் போட்டிருக்கிறார் ஒரு வாடிக்கையாளர் (இந்து, மார்ச், 16). எத்தகைய சில்லறைத்தனமான மோசடியிலும் இறங்கத் தயங்காதது அம்பானியின் நிறுவனம் என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா?

### இனி எங்கே போவது?

எல்லா தொழில்களிலிருந்தும் துரத்தப்படும் பரிதாபத்துக்குரிய மக்கள் அனைவரும் கடைசியாக வந்து சேரும் புகலிடம்தான் சில்லறை வணிகம். இந்த பரிதாபத்துக்குரிய மக்களின் வயிற்றிலடித்து சொத்து சேர்க்கலாம் என்று ஒரு முதலாளி நினைக்கிறான் என்றால் அவனை விடக் கொடூரமான கொலைகாரன் வேறு யாராவது இருக்க முடியுமா?

ஆனால், அரசாங்கம் இவர்களைத்தான் அரவணைக்கிறது. இவர்கள் பேச்சுக்குத்தான் ஆடுகிறது. வால்மார்ட் போன்ற பன்னாட்டு நிறுவனங்களை நுழைப்பதற்காக டெல்லி சிறுவணிகர்களின் கடைகளுக்குப் பூட்டு போடு

படிப்பகம்

www.padippakam.com



**ஆயிரக்கணக்கான சில்லறை வியாபாரக் கடைகளை மூடச் சொல்லி உத்தரவு போட்ட உச்சநீதி மன்றத் தீர்ப்புக்கு எதிராக தில்லி வணிகர்களும், கடைச் சிப்பந்திகளும் நடத்திய போராட்டம். (கோப்புப் படம்)**

கிறது உச்சநீதி மன்றம். சென்னை, மும்பை, டெல்லி, கல்கத்தா போன்ற பெரு நகரங்களில் நடைபாதை வியாபாரிகளை புல்டோசர் வைத்து அப்புறப்படுத்துகிறது அரசு. இதையும் மீறி உயிரோடிருக்கும் சிறு வணிகர்களை ஒழித்துக் கட்டுவதற்காகவே பன்னாட்டு நிறுவனங்களின் உத்தரவின் பேரில் வாட் என்ற வரி விதிப்பு முறை நாடு முழுவதும் திணிக்கப்பட்டிருக்கிறது.

**எங்கே போனார்கள்**
**ஓட்டுக் கட்சிகள்?**

உலகத் தமிழர்களுக்காகவெல்லாம் சீறும் புரட்சிப் புயல் வைகோ, அம்பானிக்கு எதிராக சீறாத மர்மம் என்ன? சதாம் உசேனைத் தூக்கிலிட்ட அமெரிக்காவுக்கே கண்டனம் தெரிவித்த புரட்சித் தலைவி அம்பானிக்கு ஒரு கண்டனம் தெரிவிக்காத இரகசியம் என்ன? மகனுக்கு மத்திய மந்திரி பதவி வாங்குவதற்கு மன்மோகன் சிங்கிடம் கறாராகப் பேரம் பேசத் தெரிந்த அய்யா ராமதாசு, அம்பானியை விரட்டாவிட்டால் ஆட்சிக்கு ஆதரவு இல்லை என்று கறாராகப் பேசாத மாயமென்ன? தன்னுடைய திருமண மண்டபம் இடிக்கப்படுவதை உலகப் பிரச்சினையாக்கிய கேப்டன், கோயம்பேடு தொழிலாளர்களின் வாழ்க்கை இடிக்கப்படுவதை எதிர்த்து வீரவசனம் கூடப் பேசவில்லையே ஏன்? மத்திய அரசையே ஆட்டிப்படைப்பதாகப் பெருமை பீற்றிக் கொள்ளும் மார்க்சிஸ்டுகள் அம்பானி விசயத்தில் அடக்கி வாசிப்பது ஏன்?

''ஒரு இலட்சம் குடும்பங்கள் பட்டினியால் சாகப் போகிறோம்'' என்று கருணாநிதியிடம் சென்று கதறி அழுதாலும் அவர் எல்லோருக்கும் 2 ரூபாய் அரிசி வேண்டுமானால் கொடுப்பாரே தவிர, அம்பானியையும் வால்மார்ட்டையும் ''வெளியே போ'' என்று மட்டும் சொல்லமாட்டார். ஒருவேளை, வாய்தவறிச் சொல்லி விட்டால் அடுத்த கணமே அவர்தான் பதவியிலிருந்து வெளியே போக வேண்டியிருக்கும்.

**தேர்தல் பாதை தீர்வல்ல!**

இது சுதந்திர நாடு அல்ல. உலக வங்கிக்கும் உலக வர்த்தகக் கழகத்துக்கும் அமெரிக்காவுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் அடிமைச்சாசனம் எழுதிக் கொடுத்திருக்கும் அடிமை நாடு. திராவிடம், தேசியம், தமிழினம் என்று ஓட்டுக் கட்சிகள் பேசும் பேச்செல்லாம் வெறும் வார்த்தை ஜாலங்கள். வெறும் வாய்ச் சவடால்கள். இவர்களுடைய வாய்ச்சவடால்களால் அம்பானியின் கடையிலிருந்து ஒரேயொரு கத்தரிக்காயைக் கூட வெளியே தூக்கி யெறிய முடியாது.

அம்பானி என்பவன் தனியொரு முதலாளி அல்ல. கோயம்பேடு பிரச்சினை தனியான பிரச்சினையும் அல்ல. தனியார்மய, தாராளமயக் கொள்கைகளின் ஒரு விளைவாகத்தான் இன்று சில்லறை வணிகத்தில் பன்னாட்டுக் கம்பெனிகள் நுழைகின்றன. இதனைக் காய்கனி வணிகர்கள் மட்டும் தனியாகப் போராடி வெல்ல முடியாது.

அம்பானியின் பின்னால் இந்தியத் தரகு முதலாளிகள் அனைவரும் இருக்கிறார்கள். பன்னாட்டு நிறுவனங்கள் இருக்கின்றன. அரசு எந்திரமும் போலீசும் கோர்ட்டும் மத்திய மாநில அரசுகளும் எல்லா ஓட்டுக் கட்சிகளும் அம்பானிக்குப் பக்கபலமாக நிற்கின்றனர். இந்த மிகப்பெரிய எதிரியை எதிர் கொள்ள வேண்டுமென்றால் மறுகாலனியாதிக்கக் கொள்கைகளால் பாதிக்கப்பட்ட அனைவரும் ஓரணியில் திரண்டு போராடினால் தான் முடியும்.

**மக்களிடம் செல்வோம்!**
**மறுகாலனியாக்கத்தை வெல்வோம்!**

ரிலையன்ஸ் நிறுவனத்தால் வாழ்க்கையை இழந்த வியாபாரிகள் கோயம்பேட்டில் உண்ணாவிரதம் இருப்பதனால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடாது. கூடைக்காரப் பெண்களும், தள்ளுவண்டி வியாபாரிகளும், மளிகைக் கடை அண்ணாச்சிகளும் ரிலையன்சின் கடை வாசலில் மறியல் செய்ய வேண்டும்.

எங்கெல்லாம் ரிலையன்ஸ் கடை இருக்கிறதோ அந்தச் சுற்று வட்டாரம் முழுவதும் உள்ள தள்ளுவண்டி வியாபாரிகளும் மளிகைக் கடை-காய்கறிக் கடைக்காரர்களும் ரிலையன்ஸ் எதிர்ப்பு, பன்னாட்டு நிறுவன எதிர்ப்புப் பிரச்சாரத்தைத் தம் கடைகளில் இருந்தபடியே செய்ய முடியும். காய்கறி விற்கும் பெண்கள் தம் கூடைகளில் ரிலையன்ஸ் எதிர்ப்புப் பிரச்சாரத் துண்டறிக்கைகளைக் கொண்டு சென்று வீடு வீடாக இந்தக் கருத்தைப் பரப்ப முடியும்.

பிழைப்பதற்குரிய எல்லா வழிகளும் அடைபட்டு, கடைசியாகக் கையை ஊன்றிக் கரணம் போட்டு, கந்து வட்டிக்குக் கடன் வாங்கி சரக்கெடுத்து தெருத்தெருவாக அலைந்து திரிந்து வாடிக்கையாளர்களை உருவாக்கி, இரண்டு வேளை கஞ்சி குடிக்க ஒரு வழியை உருவாக்கிக் கொண்டால், கரையான் புற்றெடுக்க கருநாகம் நுழைந்தது போல நுழைந்திருக்கிறான் அம்பானி. இந்தப் பாம்புக்குப் பால் வார்க்கிறது அரசு.

பாம்பைப் பார்த்து நடுங்கி அன்றாடம் செத்துப் பிழைப்பதை விட ஒரே போடாய்ப் போட்டு விடுவதுதான் அறிவுக்கு உகந்த செயல். மானமுள்ள வழியும் அதுதான்!

●●●

**''சிறு வணிகத்தை விழுங்க வரும்**
**ரிலையன்ஸ், வால்மார்ட்டே**
**வெளியேறு!''**
**என்ற பிரசுரத்தில் இருந்து**
**இக்கட்டுரை சுருக்கி**
**வெளியிடப்பட்டுள்ளது.**

*பிரதிகள் கிடைக்குமிடம்:*
**இரா. சீனிவாசன், புதிய கலாச்சாரம்,**
**18, முல்லைநகர் வணிக வளாகம்,**
**2-வது நிழற்சாலை, அசோக்நகர்,**
**சென்னை - 83.**

●●●

படிப்பகம்

www.padippakam.com

7-ஆம் பக்கத் தொடர்ச்சி

கைக்கூலிகளும் நகரங்களுக்குத் தப்பியோடினர். இவ்வட்டாரமெங்கும் அரசு நிர்வாகமும் போலீசு நிர்வாகமும் செயலிழந்து, விவசாயிகளின் புரட்சிகர அதிகாரத்தை விண்ணில் பட்டொளி வீசிப் பறந்த செங்கொடிகள் பறைசாற்றின.

அன்று மே.வங்கத்தில் அஜாய்முகர்ஜி தலைமையிலான கூட்டணி ஆட்சி நீடித்தது. அதில் ஜோதிபாசு போலீசு அமைச்சராகவும், அரிகிருஷ்ணகோனார் வருவாய்துறை அமைச்சராகவும் இருந்தனர். நக்சல்பாரி பேரெழுச்சியை கண்ட அரிகிருஷ்ணகோனார், ''ஐயோ, நிலைமை கட்டுமீறிப் போய்விட்டது'' என்று அலறினார். ''சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்து விட்டது'' என்று எகிறிக் குதித்தார் ஜோதிபாசு. ''ஐயோ! வன்முறை, தீவிரவாதம்'' என்று கூப்பாடு போட்டது சி.பி.எம். கட்சி. சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுவது என்ற பெயரில் போலீசை ஏவி கொலைவெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டார் ஜோதிபாசு. ஆறு பெண்கள், இரு குழந்தைகள் உள்ளிட்டு 9 பேர் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர்; விவசாயிகள் இயக்க முன்னணியாளர்கள் பலர் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர். நக்சல்பாரி வட்டாரமெங்கும் போலீசு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டு, விவசாயிகளின் பேரெழுச்சி கொடூரமாக ஒடுக்கப்பட்டது.

அன்று நக்சல்பாரி; இன்று நந்திகிராமம். போராடும் விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூடு - கொலைவெறியாட்டம். ''ஐயோ! பயங்கரவாதம், தீவிரவாதம்'' என்ற அதே கூப்பாடு. ''சட்டம் - ஒழுங்கு கெட்டுவிட்டது'' என்ற அதே ஒப்பாரி. ''வன்முறையாளர்கள் - தீவிரவாதிகள்'' என்ற அதே கோயபல்சு புளுகு. ஒரேயொரு வேறுபாடு - அன்று சி.பி.எம். கட்சியிடம் பாசிச குண்டர்படை இல்லை; இன்று சி.பி.எம். கட்சி ஒரு வலுவான குண்டர் படையைக் கட்டியமைத்துள்ளது. போராடும் மக்கள் மட்டுமல்ல; நந்திகிராமத்தில் உண்மையைக் கண்டறிய முற்பட்ட பத்திரிகையாளர்களும் சி.பி.எம் குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளனர். அவர்கள் செய்தி சேகரிக்கும் உரிமையைக் கூட மறுத்து, சாலை மறியல் போராட்டம் நடத்தி பத்திரிகையாளர்களை விரட்டியடித்துள்ளது, சி.பி.எம். குண்டர்படை.

நந்திகிராமத்தில் பாசிச கொலைவெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டு; போராடும் விவசாயிகளை ஒடுக்கியபோதிலும், அங்கு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவும் முயற்சியில் சி.பி.எம். பாசிச ஆட்சி தோற்றுப் போயுள்ளது. கொலைவெறியாட்டம் நாடெங்கும் அம்பலப்பட்டுப் போயுள்ளதால், நந்திகிராமத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவப்பட மாட்டாது என்று அறிவித்துள்ளார் மே.வங்க கொலைகார முதல்வர். அதேசமயம், ஏகாதிபத்தியங்களுக்கும் தரகுப் பெருமுதலாளிகளுக்கும் விசுவாசமாகத் தொண்டூழியம் செய்து வரும் சி.பி.எம். ஆட்சியாளர்கள், மே.வங்கத்தின் வேறு பகுதியில் சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவப் போவதாக அறிவித்துள்ளனர். சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவி மாநிலத்தை தொழில்மயமாக்கும் கொள்கையில் நாங்கள் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம் என்று இதர ஓட்டுக் கட்சிகள் அனைத்தையும் விஞ்சும் வண்ணம் சூளுரைக்கிறார் கரத்.

நந்திகிராமத்தில் நடந்த பாசிச கொலைவெறியாட்டங்களை மூடிமறைத்து, போராடும் மக்களையும் நக்சல்பாரி புரட்சியாளர்களையும் குற்றம் சாட்டி சி.பி.எம். கட்சியினர் எதிர்ப்பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இந்நிலையில், உள்நாட்டு-வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளின் அடியாட்களாகவும், உழைக்கும் மக்களின் எதிரிகளாகவும் சீரழிந்துவிட்ட பாசிச சி.பி.எம். கட்சியை புரட்சிகர - ஜனநாயக சக்திகள் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். இக்கட்சியிலுள்ள புரட்சியை நேசிக்கும் அணிகள் உடனடியாகக் கலகத்தில் இறங்கி, பாசிஸ்டுகளாகச் சீரழிந்துவிட்ட துரோகத் தலைமையைத் தூக்கியெறிந்து விட்டு, உண்மையான கம்யூனிஸ்டுகளாகிய நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளில் அணிதிரள வேண்டும். அதன் மூலம் மார்க்சிய - லெனினியத்தைப் பற்றிப் பாதுகாத்து, மறுகாலனியாக்கத்தை வீழ்த்தும் மகத்தான புரட்சிக்குத் தோள்கொடுக்க வேண்டும்.

● இரணியன்

---

***மக்களைக் கொல்லும் விலைவாசி உயர்வு! மறுகாலனியாக்கக் கொள்கையின் விளைவு!***

## - புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம் - ஆர்ப்பாட்டம்

தாறுமாறாக உயர்ந்து கொண்டே போகிறது விலைவாசி. மறுகாலனியாக்கக் கொள்கைகளின் விளைவுதான் இந்த விலைவாசி உயர்வு என்ற உண்மையைத் திட்டமிட்டே மறைப்பதில் எல்லா ஓட்டுக்கட்சிகளும் ஓரணியில் நிற்கின்றன. விலைவாசி உயர்வு காய்ச்சலென்றால், அதைத் தோற்றுவிக்கும் டைபாய்டு கிருமி மறுகாலனியாக்கம். கிருமியைப் பாதுகாத்துக் கொண்டே, காய்ச்சலை மட்டும் கட்டுப்படுத்தி விடலாம் என்று பித்தலாட்டம் செய்கின்றன ஓட்டுக் கட்சிகள்.

மக்களைக் கொல்லும் விலைவாசி உயர்வு என்பது மறுகாலனியாக்க அடிமைத்தனத்தின் விளைவு என்பதை விளக்கியும், மறுகாலனியாக்கத்தை வீழ்த்த உழைக்கும் மக்கள் புரட்சிகர அமைப்புகளில் திரண்டு போராட வேண்டிய அவசியத்தை உணர்த்தியும் பல்லாயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள், முழக்கத்தட்டிகள், தெருமுனைக் கூட்டங்கள் மூலம் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள். அதன் தொடர்ச்சியாக கடந்த 15.3.07 அன்று தமிழகமெங்கும் விலைவாசி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தின. சென்னை, திருச்சி, தஞ்சை, கோவை, விழுப்புரம், நெய்வேலி, சிவகங்கை, சீர்காழி, சாத்தூர், ஓசூர், தொண்டி, பென்னாகரம், உசிலம்பட்டி ஆகிய இடங்களில் திரளான உழைக்கும் மக்களும் தோழமை அமைப்புகளும் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டங்கள், விலையேற்றத் தாக்குதலுக்கு எதிராகவும் ஓட்டுக் கட்சிகளின் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தி நாட்டு விடுதலைக்காகப் போராட அறைகூவுவதாகவும் அமைந்தன.



தஞ்சையில்...

- பு.ஜ. செய்தியாளர்கள்.

www.padippakam.com

## பட்ஜெட்:

# ஆடு நனைகிறதென்று ஓநாய்கள் அழுகின்றன

பஞ்சாப், உத்தர்கண்ட் சட்டசபைத் தேர்தல்களில் வாங்கிய அடி, காங்கிரசு கட்சியை விலைவாசி உயர்வைப் பற்றிப் பேச வைத்திருக்கிறது. அதனால், சாமான்ய மக்களின் நலனை மனதில் கொண்டு, 2007-08 ஆண்டுக்கான மைய அரசின் பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாக, ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி கூறி வருகிறது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.5%-ஐத் தாண்டி வளர்ந்து 'சாதனை' படைத்து விட்டாலும், விவசாய வளர்ச்சி பின்தங்கி விட்டது. விவசாய உற்பத்தித் தேங்கிப் போனதால், உணவுப் பொருள் விலையெல்லாம் உயர்ந்து விட்டது. எனவே, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும்; விவசாயத்தையும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இந்த பட்ஜெட்டில் பல திட்டங்கள் போடப்பட்டுள்ளதாகக் காங்கிரசுக் கட்சிப் பீற்றிக் கொள்கிறது.

விவசாயிகளுக்கு பொதுத்துறை வங்கிகள் மூலம் வழங்கும் கடன் 2.25 லட்சம் கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது; கடந்த ஆண்டைவிட மேலும் 50 இலட்சம் விவசாயிகளுக்குக் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; நீர்ப்பாசனத் திட்டங்களை மேம்படுத்த சிறப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கு 16,979 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பன உள்ளிட்டு விவசாய வளர்ச்சிக்கு 18 அம்சத் திட்டமொன்றை ப.சிதம்பரம் பட்ஜெட்டில் அறிவித்திருக்கிறார். இதன் மூலம் விவசாய உற்பத்திப் பெருகி விலைவாசி குறையும்; விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் நின்றுவிடும் என ஆரூடம் கூறுகிறார்.

கடந்த ஆண்டு பட்ஜெட்டில் கூட, பொதுத்துறை வங்கிகள் மூலம் 1,90,000 கோடி ரூபாய் விவசாயக் கடனாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. எனினும், கடந்த பட்ஜெட்டுக்கும், இந்த பட்ஜெட்டுக்கும் இடைபட்ட இந்த ஓராண்டில், மகாராஷ்டிராவைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பருத்தி விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனதை இந்த வங்கிக் கடன் தடுத்து நிறுத்திவிடவில்லை.

விதை, உரம், பூச்சி மருந்து ஆகிய இடுபொருட்களின் விலைகள் எவ்வித கட்டுப்பாடும் இன்றித் தாறுமாறாக உயர்ந்துகொண்டே போவதால், உற்பத்திச் செலவு அதிகமாகிக் கொண்டே போகிறது. எவ்வளவுதான் நன்றாக விளைந்தாலும், இந்த உற்பத்திச் செலவை ஈடுகட்டும் விலை விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. விவசாயிகள் விவசாயக் கூட்டுறவு வங்கியில் வாங்கும் கடனைக் கூட அடைக்க முடியாமல் முழி பிதுங்கி நிற்பதற்கு, இதுதான் அடிப்படை. எனவே, விவசாய விளைபொருட்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைப்பதை உத்தரவாதப்படுத்தாமல், விவசாயக் கடனை அதிகரிப்பது வங்கிக் கடன் பெறும் விவசாயிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது என்பதெல்லாம் புண்ணுக்குப் புனுகு தடவுவதாகத்தான் முடியும்.

இந்திய விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய்வதற்காக, ''விவசாயிகள் தேசிய கமிசன்'' என்ற அதிகாரவர்க்க கமிட்டியை கடந்த ஆண்டே மைய அரசு அமைத்தது. ஆடு நனையுதென்று ஓநாய் அழுத கதையாக, இந்த கமிட்டியின் தலைவராக அமெரிக்கக் கைக்கூலி (வேளாண் விஞ்ஞானி) எம்.எஸ். சுவாமிநாதன் நியமிக்கப்பட்டார். கந்து வட்டிக் கடன் தொல்லை, விளைபொருட்களின் விலை வீழ்ச்சி ஆகிய பிரச்சினைகளை மட்டுமின்றி, அந்நிய நாடுகளில் இருந்து விவசாய விளைபொருட்களைத் தாராளமாக இறக்குமதி செய்து கொள்வதற்குக் கொடுக்கப்பட்டுள்ள அனுமதியை அடியோடு ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் விவசாயிகள் இக்கமிசன் முன் வைத்தனர்.

பருத்தி கொள்முதலை முறையாக நடத்தக் கோரி மகாராஷ்டிராவில் நடந்த விவசாயிகள் போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பலியான தினேஷ் கோகுலின் குடும்பம்.



விவசாயிகளின் உயிராதாரமான இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்ட அக்கமிசன், ''விவசாயத்திற்கு வழங்கப்படும் வங்கிக் கடனுக்கான வட்டியைக் குறைக்க வேண்டும்; சந்தை ஏற்ற இறக்கத்தால் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, தனியாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்'' என்பன உள்ளிட்டு சில சில்லறை பரிந்துரைகளை மைய அரசிடம் அளித்தது.

விவசாயிகளின் நலனுக்காக பட்ஜெட் போட்டதாகப் பீற்றிக் கொள்ளும் ப.சிதம்பரம், விவசாயிகள் கோரியபடி வேளாண்

படிப்பகம்

www.padippakam.com




விளைபொருட்களின் இறக்குமதிக்கும் தடை போடவில்லை. தேசிய கமிசனின் அற்பமான பரிந்துரைகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, விவசாயிகளின் பிரச்சினையை ஆராய ராதாகிருஷ்ணன் கமிட்டியை அமைப்பதாக பட்ஜெட்டில் அறிவித்து, விவசாயிகளின் பிரச்சினையை மீண்டும் ஊறுகாய் பானைக்குள் போட்டுவிட்டார்.

16,979 கோடி ரூபாய் செலவில் நீராதாரங்களை மேம்படுத்தப் போவதாக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்தாலும், இத்திட்டத்திற்காகத் தற்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள தொகை வெறும் 100 கோடி ரூபாய்தான். இப்புள்ளிவிவர மோசடித்தனம் ஒருபுறமிருக்க, ஒவ்வொரு மாநிலமும், தங்களின் நீர் ஆதாரங்களை மேம்படுத்த, மைய அரசின் முன்அனுமதியின்றியே, உலக வங்கியிடமிருந்து கடன் பெற்றுக் கொள்ளலாம் என்ற சலுகையை வாரி வழங்கியிருக்கிறார், ப.சிதம்பரம். இதன் அடிப்படையில், தமிழகம், காவிரி இறுதித் தீர்ப்பு வந்த சூட்டோடு, உலக வங்கியிடமிருந்து 2,182 கோடி ரூபாய் கடன் பெற ஒப்பந்தம் போட்டுள்ளது. "குடிநீர், பாசன விநியோகத்தைத் தனியார்மயப்படுத்த வேண்டும். குடிநீர் மற்றும் பாசனக் கட்டணங்களை உயர்த்த வேண்டும்" என்ற நிபந்தனைகள் இன்றி இந்தக் கடன் ஒப்பந்தம் முடிவாகி இருக்காது. இந்தக் கடன் மூலம் தமிழகத்திலுள்ள ஆறு, ஏரி, குளம் போன்ற நீர் ஆதாரங்கள் மேம்படுகிறதோ இல்லையோ, அவை கூடிய விரைவில் தனியார்மயமாகி விடும் என நிச்சயமாகச் சொல்லலாம்.

பட்ஜெட்டின் பெருமையைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு, தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாவட்டங்களின் எண்ணிக்கையை 200-லிருந்து 330 ஆக உயர்த்தியிருப்பதையும்; அத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 11,300 கோடி ரூபாயிலிருந்து ரூ. 12,000 கோடியாக அதிகரிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டுகிறார்கள். ஆனால், இத்திட்டத்தைத் தீவிரமாக கண்காணித்து வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், இத்திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் என்றால், ஒரு மாவட்டத்துக்கு தலா 100 கோடி ரூபாய் தேவைப்படும். இதன்படி 33,000 கோடி ரூபாய் இல்லாமல் இத்திட்டத்தை 330 மாவட்டங்களில் முழுமையாகச் செயல்படுத்த முடியாது; விலைவாசி உயர்வோடும், பணவீக்கத்தோடும் ஒப்பிட்டால், பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை யானைப் பசிக்குச் சோளப் பொரிதான் என விமர்சித்துள்ளன.

இந்தியாவில் பள்ளிக்குச் செல்லும் வயதிலுள்ள குழந்தைகளுள் ஏறத்தாழ 1.3 கோடி குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படுவதேயில்லை. பெற்றோர்களின் வறுமை மட்டும் இதற்குக் காரணம் இல்லை. இந்தியாவெங்கும் 31,478 கிராமங்களில் பள்ளிக் கூடங்களே கிடையாது. 6,647 பள்ளிக் கூடங்களில் கட்டிடங்கள்தான் இருக்கிறதேயொழிய, பாடம் நடத்த ஒரு ஆசிரியர் கூட நியமிக்கப்படவில்லை. 75,884 பள்ளிகளில் ஒரேயொரு ஆசிரியர்தான் இருக்கிறார்.

இப்படி அவலமான நிலையில் இருக்கும் ஆரம்பக் கல்விக்கும், மதிய உணவுத் திட்டத்திற்கும் சேர்த்து 23,142 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டைவிட 6,000 கோடி ரூபாய் அதிகம் என பட்ஜெட்டின் துதிபாடிகள் மெச்சிக் கொள்வது உண்மைதான். ஆனாலும், இந்தக் கூடுதல் நிதி ஒதுக்கீடின் பின்னே, ஒரு பொறியையும் மறைத்து வைத்துள்ளார், ப.சிதம்பரம். அனைவருக்கும் ஆரம்பக் கல்வி திட்டத்திற்கு மைய அரசு 75 சதவீத நிதியையும், மாநில அரசுகள் 25 சதவீத நிதியையும் ஒதுக்கி வந்தன. இனி, மைய அரசு 50 சதவீத நிதியைத்தான் ஒதுக்கும் எனக் குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார், ப.சிதம்பரம்.

2 இலட்சம் ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படுவார்கள்; 5 இலட்சம் வகுப்பறைகள் புதிதாகக் கட்டப்படும் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்தாலும், இத்திட்டங்களுக்காக ஒரு பைசாகூட நிதியாக ஒதுக்கப்படவில்லை.

ஆரம்பப் பள்ளியில் சேரும் மாணவர்களுள், 35 சதவீத மாணவர்கள் ஐந்தாம் வகுப்பு முடித்த பிறகும்; 53 சதவீத மாணவர்கள் எட்டாம் வகுப்பு முடித்த பிறகும்; 63 சதவீத மாணவர்கள் பத்தாம் வகுப்பு முடித்த பிறகும் மேலே படிக்க முடியாமல், இடையிலேயே நின்று விடுவதாக அரசே ஒப்புக் கொண்டுள்ளது. இப்படி இலட்சக்கணக்கான மாணவர்கள் படிப்பைப் பாதியிலேயே கைவிடும்பொழுது, அவர்களுள் "திறமை" வாய்ந்த ஒரு இலட்சம் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 6,000/- கல்வி உதவித் தொகை அளிக்கப் போவதாக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள மாணவர்கள், தங்களுக்குத் "திறமை"யும் இல்லை, "அதிருஷ்டமும்" இல்லை என மனதைத் தேற்றிக் கொண்டு, குழந்தைத் தொழிலாளியாகப் போக வேண்டியதுதான்.

பட்ஜெட்டைக் கூறு போட்டால், சமூக நலத் திட்டங்கள் பற்றிய டாம்பீக அறிவிப்புகளுக்கும், உண்மை நிலைக்கும் இடையே மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு இருப்பதைப் பச்சையாகக் காண முடியும். இந்தியப் பொருளாதாரம் 8.5 சதவீதத்தைத் தாண்டி "வளர்ந்து" செல்லும் நிலையிலும் கூட, சமூக நலத் திட்டங்களுக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய ஏன் மறுக்கிறார்கள்?

பட்ஜெட்டில் பற்றாக்குறை குறிப்பிட்ட வரம்பைத் தாண்டிச் செல்லக் கூடாது என்பது உலக வங்கியின்

www.padippakam.com

கட்டளை. இப்பற்றாக்குறையை ஈடு கட்ட வேண்டும் என்றால், தரகு முதலாளிகள் மீது, பன்னாட்டு நிறுவனங்கள் மீது கூடுதலாக வரி விதிக்க வேண்டும்; இல்லையென்றால், மக்களின் குரல்வளையை இறுக்க வேண்டும். முதலாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வரிச் சலுகைகளை பறித்தாலோ, அவர்கள் மீது கூடுதல் வரி விதித்தாலோ தாராளமய ஆதாரவாளர்கள் கொதித்துப் போய் விடுவார்கள். அதனால்தான் மக்களின் தேவைகளை இறுக்கிப் பிடித்து, உலக வங்கி நிர்ணயித்துள்ள பற்றாக்குறை வரம்பைத் தாண்டாமல் பட்ஜெட்டைப் போட்டிருக்கிறார், ப.சிதம்பரம்.

"பொருளாதார வளர்ச்சி" பாதிக்கப்படக்கூடாது எனக் கூறி, இந்த பட்ஜெட்டில் தரகு முதலாளிகள் மீதோ, பன்னாட்டு நிறுவனங்கள் மீதோ அதிக அளவில் வரி விதிக்கப்படவில்லை. அவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள 1,50,000 கோடி ரூபாய் வரிச் சலுகையிலும் ப.சிதம்பரம் கைவைக்கவில்லை. முதலாளிகளுக்கு வரிச் சலுகை அளித்தால் விலைவாசி குறைந்துவிடும் எனக் கூறி, பல்வேறு பொருட்கள் மீது விதிக்கப்படும் உற்பத்தி வரியைக் குறைத்து, சலுகைகளை மேலும் வாரி வழங்கியிருக்கிறார்.

ஆனால், இந்தச் சலுகை அறிவிப்பானது, கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாகிவிட்டது. சிமெண்ட் ஆலை முதலாளிகள், பட்ஜெட் வெளியான மறுநாளே, பட்ஜெட் அறிவிப்புகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே, சிமெண்ட் விலையை உயர்த்தி, மக்களைக் கொள்ளையடிக்கத் தொடங்கி விட்டனர்.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு, கர்நாடகாவைச் சேர்ந்த கடலை விவசாயிகள், கடலையின் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி போராடியபொழுது, அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. ஆனால் ஜேப்படி திருடர்கள் போன்று கொள்ளையடிக்கும் சிமெண்ட் முதலாளிகள் விசயத்திலோ துப்பாக்கிகள் மௌனம் காக்கின்றன. விலையைக் குறைக்கும்படி அவர்களின் காலில் விழுந்து மன்றாடுகிறார், ப.சிதம்பரம். சிமெண்ட் முதலாளிகளோ அடுத்த ஆண்டுவரை விலையை உயர்த்த மாட்டோம் எனத் திமிராகப் பதில் அளிக்கிறார்கள். சாமானிய மக்களுக்காகப் போடப்பட்டதாகக் கூறப்பட்ட பட்ஜெட், மையின் ஈரம் உலரும் முன்பே, சாயம் வெளுத்து நிற்கிறது!

● செல்வம்

## ஆடம்பரத் திருமணங்கள்

# பெருக்கெடுத்து ஓடும் பணக் கொழுப்பு

மறுகாலனியாதிக்கம் தோற்றுவித்த பயங்கரத்தால் வாழ்விழந்த விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போவதும், தொழிலாளர்கள் வேலையிழந்து கொத்தடிமைகளாக உழல்வதும், வறுமையும் பட்டினியும் பெருகுவதும் தீவிரமடைந்து வருகிறது. மறுபுறம், இந்தியாவில் பணக்காரர்களும் பெருகிக் கொண்டே போகிறார்கள். உலகின் மிகப் பெரும் கோடீசுவரர்களின் பட்டியலில் இந்தியப் பெருமுதலாளிகளும் இடம் பெற்றுள்ளதாகப் பூரித்துப் போகின்றனர் ஆட்சியாளர்கள் கோடீசுவரர்கள் பெருகப் பெருக அவர்களின் பணக் கொழுப்பு வக்கிரமாக வழிந்தோடுகிறது. நாடே அதிர்ச்சியடையும் அளவுக்கு அந்த வக்கிரம் கேள்விமுறையின்றி பகிரங்கக் கூத்தாக நடக்கத் தொடங்கி விட்டது.

எலிசபத் ஹர்லீ, பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த முன்னாள் 'மாடல் அழகி'. 41 வயதைக் கடந்துவிட்ட ஹர்லீ, பெருந்தொழில் அதிபரும் இந்திய வம்சாவளியினருமான அருண் நய்யார் என்ற 42 வயதுக்காரரை கடந்த மார்ச் மாதத்தில் பிரிட்டனிலுள்ள சட்லே கோட்டையில் திருமணம் செய்து கொண்டார். ஏற்கெனவே மணவிலக்கு பெற்று மறுமணம் புரிந்து கொண்டுள்ள இத்தம்பதிகளின் திருமணத்துக்கு எடுத்த பட்டுச்சேலையின் மதிப்பு ரூ. 3.5 லட்சத்துக்கும் மேலானது. இந்தி சினிமாப் பாடல்களுடன் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டத்துடன் நடந்த இத்திருமணத்தையும் விருந்து-களியாட்டங்களையும் இத்தம்பதிகள்; தனியொரு சினிமாப் படமாகவும் எடுத்துள்ளனர்.

ஆடம்பரமாக நடந்த இத்திருமணக் கூத்து இத்துடன் முடியவில்லை. மணமகளது நாட்டில் நடந்தது போல், மணமகனது பூர்வீக நாடான இந்தியாவிலும் இத்தம்பதிகள் பார்ப்பன இந்து முறைப்படி இன்னுமொரு திருமணச் சடங்கை நடத்தினர். தமது 4 வயது மகனுடன் வந்த ஹர்லீ-நய்யார் தம்பதியினர் மும்பையிலிருந்து தனிவிமானத்தில் ராஜஸ்தானிலுள்ள ஜோத்பூர் கோட்டைக்குப் பறந்தனர். யானைகள், ஒட்டகங்களுடன் அலங்கார அணிவகுப்பு ஊர்வலம், விருந்தினர்களை அழைத்துவர ஏழு தனிவிமானங்கள், ஜோத்பூர் அரண்மனையில் விடிய விடிய சீமை சாராயத்துடன் களிவெறியாட்டம், அறுசுவை விருந்து என அமர்க்களப்படுத்தினர் இத்தம்பதிகள். இந்திய நாட்டில் இப்படியொரு ஆடம்பரத் திருமணம் இதுவரை நடந்ததேயில்லை என்று அதிசயித்து பரபரப்புடன் செய்திகளை வெளியிட்டன பத்திரிகைகள்.

பல கோடிகளை விழுங்கிய இந்த ஆடம்பர வக்கிரக் கூத்து நடந்த ஜோத்

பிரிட்டனிலுள்ள சட்லே கோட்டையிலும், ராசஸ்தானிலுள்ள ஜோத்பூர் கோட்டையிலும் இரண்டு முறை ஆடம்பரமாகத் திருமணம் செய்து கொண்ட எலிசபெத் ஹர்லீ - அருண் நய்யார் இணை.



படிப்பகம்

www.padippakam.com



பணக் கொழுப்பையும், திமிரையும் காட்டிக் கொள்ள, திருமண விழாவின் ஒரு பகுதியாக நடைபெறும் கூத்தும், கும்மாளமும்.

பூர் அரண்மனையருகே உள்ள நகர்ப்புறச் சேரிப்பகுதியில் வசிக்கும் உழைக்கும் மக்களின் மாத வருவாயோ ரூ. 2000-க்கும் குறைவு. இதர மாநிலங்களைவிட ஒப்பீட்டு ரீதியில் பின்தங்கியுள்ள ராஜஸ்தான் மாநில கூலி-ஏழை விவசாயிகளின் வருமானமோ அதைவிடக் குறைவு. வறுமையும், பட்டினியும் கல்வியுள்ள அம்மாநிலத்தில்தான் இந்த வக்கிரமான திருமண விழா நடந்துள்ளது. பணக்கொழுப்பை விகாரமாகக் கொண்டாடும் இந்த நிகழ்ச்சியைத் தடுக்கவோ கட்டுப்பாடு விதிக்கவோ கூட அம்மாநில அரசு முன்வரவில்லை. மாறாக, மாநிலத்தின் பெருமையை உலகறியச் செய்ததாகக் கூறி, இந்த வக்கிர விழாவுக்கு எல்லா உதவிகளையும் அம்மாநில அரசு செய்துள்ளது.

இந்த வக்கிர திருமண விழாவையே விஞ்சும் வகையில் கடந்த 2004-ஆம் ஆண்டில் நடந்த பிரிட்டனில் வாழும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மிகப்பெரும் கோடீசுவர வைர வியாபாரி மிட்டல் குடும்பத்தின் திருமண விழாவும், கடந்த டிசம்பரில் நடந்த பெருந்தொழிலதிபர் லோகியா குடும்பத்தின் திருமண விழாவும் பல்லாயிரம் கோடிகளை விழுங்கியது. ராஜஸ்தான் உதய்பூர் கோட்டையில் விழா, ஐந்து நட்சத்திர ஓட்டலில் வரவேற்பு, ஆட்டம், பாட்டம், வாணவேடிக்கை, வெளிநாட்டிலிருந்து வந்த சிறப்பு உணவுகள் என பணத்திமிரில் கொட்டமடித்தன, கொழுப்பேறிய பன்றிகள்.

1947 போலி சுதந்திரத்துக்கு முன்னர், ஆங்கிலேயனின் காலை நக்கி வாழ்ந்த திவான் பகதூர், ஜமீன்தார், சமஸ்தான மகாராஜா போன்ற சரிகைக் குல்லாப் பேர்வழிகள்தான் இத்தகைய ஆடம்பர வக்கிர திருமண விழாக்களை நடத்தி வந்தனர். வெள்ளைக்காரன் ஆட்சியில் பஞ்சம் தலைவிரித்தாடி மக்கள் கொத்துக் கொத்தாக பட்டினியால் மாண்டபோது, ஜுனாகத் சமஸ்தானத்தின் நவாபு, தான் வளர்த்த செல்லமான நாய்க்கு ஆடம்பரமாகத் திருமணம் நடத்தினான். இத்திருமண விழாவையொட்டி மாபெரும் விருந்தும் கச்சேரியும் நடத்தியதோடு, நாய்த்தம்பதியினர் முதலிரவைக் கொண்டாட தனி மாளிகை அமைத்து, அதற்கென ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்தான்.

இத்தகைய வக்கிமான குரூரமான விழாக்கள் காலனிய காலத்தோடு முடிந்துவிடவில்லை. போலி சுதந்திரத்திற்குப் பின்னரும் தொடர்ந்தது. மத்திய அமைச்சரான சரத்பவார், முன்பு மகாராஷ்டிரா மாநில முதல்வராக இருந்தபோது, கோடிகளை வாரியிறைத்து கோவில் திருவிழா போன்றதொரு ஆடம்பரமான திருமணத்தைத் தனது மகளுக்கு நடத்தினர். ஊரை அடித்து உலையில் போட்ட பாசிச ஜெயா நடத்திய வளர்ப்பு மகன் திருமணம் ரூ. 80 கோடிகளைத் தாண்டி நாடெங்கும் நாறியது. இத்திருமண விழாவில் நகைக்கடையாய் நடந்து வந்த உடன்பிறவா சகோதரிகளின் படத்தைப் போட்டு ஓட்டுப் பொறுக்கியது, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் தி.மு.க. அக்கட்சித் தலைமையின் மூத்த வாரிசான மு.க.அழகிரி, தன்னுடைய 56-வது பிறந்த நாளுக்கு தனது முகத்தையே மதுரை தமுக்கம் மைதானம் முழுக்க பிரம்மாண்டமான வண்ணக் கோலமாகப் போட்டு வக்கிரமாக ரசித்தார். அந்த வண்ணக் கோலத்தை முழுமையாகப் பார்த்து ரசிக்க தனி ஹெலிகாப்டர்கள் வரவழைக்கப்பட்டன. இளைய வாரிசு மு.க.ஸ்டாலினோ தன்னுடைய பிறந்தநாளுக்கு, தனக்கு யானைகள் வந்து மாலைபோடச் சொல்லி ரசித்தார்.

இவை எல்லாவற்றையும் விஞ்சும் வகையில் நடிகர் ரஜினிகாந்த் தனது பண்ணை வீட்டில் உல்லாசமாகச் சுற்றி வருவதற்காகவே, ரயில் பெட்டியொன்றை விலைக்கு வாங்கி, தனது வக்கிர கொண்டாட்டத்தைத் தொடங்கவுள்ளார். பொழுதுபோக்கிற்காக பல கோடிகளை வாரியிறைக்கும் மனநோயாளிகளின் கீழ்த்தரமான இச்செயலைக் கூட சிலாகித்து எழுதுகின்றன, கிசுகிசு பத்திரிகைகள்.

500 ரூபாய் நோட்டைச் சுருட்டிப் பற்ற வைத்து ஹெராயின் எனும் போதை மருந்தைப் புகைத்த பா.ஜ.க.வைச் சேர்ந்த மறைந்த பிரமோத் மகஜனின் மகன் ராகுல் மகஜன் பற்றிய செய்தி வெளியானபோது நாட்டு மக்கள் அதிர்ச்சியில் விக்கித்து நின்றார்கள். ஆனால் பணக்கொழுப்பெடுத்த இத்தகைய வக்கிரங்களே இப்போது அன்றாடச் செய்தியாகிவிட்டது. உலகமயத்தின் விளைவாக நுகர்வுவெறி ஆடம்பர மோகம் - பணத்திமிரைப் பறைசாற்றும் பிரம்மாண்ட விழாக்கள் என பணக்கொழுப்பேறிய பன்றிகள் நடத்தும் வக்கிரங்கள் சகிக்க முடியாதபடி பெருகிவிட்டன.

'நாகரிக' உலகைச் சேர்ந்த ஏகாதிபத்திய நாடான பிரான்சில், வேலையிழந்து வாழ்விழந்த உழைக்கும் மக்கள் ஆடம்பர உணவு விடுதிகளைச் சூறையாடி, ஆடம்பரக் கார்களை அடித்து நொறுக்கி இப்பணக் கொழுப்பெடுத்த பன்றிகளுக்கு எதிராகத் தமது வெறுப்பை வெளிப்படுத்திப் போராடுகிறார்கள். ஏழை நாடான இந்தியாவின் உழைக்கும் மக்கள் மறுகாலனியத் தாக்குதலால் மரணப் படுகுழியில் வீழ்த்தப்பட்டுள்ள நிலையில், கோடீசுவரக் கும்பலின் கொழுப்பேறிய வக்கிரங்களை இனியும் சகித்துக் கொண்டிருக்கப் போகிறோமா? அல்லது பிரான்சு நாட்டு உழைக்கும் மக்களின் வழியில் போராடப் போகிறோமா?

● கவி

படிப்பகம்

## பணவீக்கம் - விலைவாசி உயர்வு

# தனியார்மயத்தின் கோர விளைவுகள்

பங்குச் சந்தையும், அந்நிய மூலதனமும், மொத்த தேசிய உற்பத்தியும் ஒருபுறம் வளர்ந்து கொண்டே செல்லும்பொழுது, இன்னொருபுறமோ வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும், விலைவாசி உயர்வும் மக்களைப் பிடித்தாட்டுகிறது. ''வளர்ச்சி இருந்தால் ஏற்றத்தாழ்வு இருக்கத்தான் செய்யும்'', ''பணப்புழக்கம் அதிகமாக இருப்பதால் விலைவாசி உயரத்தான் செய்யும்'' என ஆளும் வர்க்கம் தர்க்க நியாயம் பேசி, இந்த எதிரும் புதிருமான நிலையை வெளிப்படையாகவே நியாயப்படுத்தி வருகிறது.

மக்கள் அனைவரின் சட்டைப் பைகளிலும் பணம் பிதுங்கிக் கொண்டு வழிவதைப் போலவும்; இந்தப் பணத்தைச் செலவழிப்பதற்காகவே அவர்கள் பொருட்களைத் தேடி ஓடுவது போலவும் ஒரு மோசடியான பிரச்சாரத்தை ஆளும் கும்பல் நடத்தி வருகிறது.

ஆனால் உண்மையென்ன? தொழில் துறை வளர்ச்சியில் முதல் இடத்தைப் பிடித்துவரும் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த கிராமப்புற ஏழை மக்கள், நாளொன்றுக்கு 30 ரூபாய் கூலியைச் சம்பாதிப்பதற்காக, தினந்தோறும் தங்கள் கிராமத்தில் இருந்து 150 கி.மீ. தூரம் பயணம் செய்ய வேண்டிய அவலமான நிலையில் இருக்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள 46 சதவீதக் குழந்தைகள் சத்தான உணவு கிடைக்காமல் நோஞ்சானாக நோய்வாய்ப்பட்டுக் கிடப்பதாக ஐ.நா.வின் அறிக்கை கூறுகிறது. ஒரு மனிதன் ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சம் 157 கிலோ அளவிற்கு அரிசி, கோதுமை, பருப்பு வகைகளை உட்கொள்ள வேண்டும்; ஆனால், இந்தியர்கள் இந்தக் குறைந்தபட்ச அளவை விட 15 கிலோ குறைவாக, 142 கிலோ கிராம் அளவிற்குத்தான் உணவுப் பொருட்களை உட்கொள்வதாக சத்துணவிற்கான தேசிய நிறுவனம் குறிப்பிடுகிறது. இந்த 142 கிலோ கிராம் நுகர்வை வர்க்கரீதியாகக் கூறு போட்டால், ஏழை விவசாயிகளும், உதிரித் தொழிலாளர்களும் அரைகுறைப் பட்டினியில் வாழ்க்கையை ஓட்டும் உண்மை புலப்படும்.

அப்படியென்றால், எந்த 'இந்தியனிடம்' பணப்புழக்கம் இருக்கிறது? அமெரிக்காவின் 'பிட்சா' வகை உணவுகளைத் தினந்தோறும் வயிறு முட்டத் தின்னும் இந்தியர்கள் யார்? என்ற கேள்விகளை எழுப்புவதன் மூலம் இந்தப் பொருளாதார வளர்ச்சியின் மோசடித்தனத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

விவசாயத்திற்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுக்க மறுக்கும் ப.சிதம்பரம், கார், இரு சக்கர வாகனங்கள், குளிர் சாதனப் பெட்டி போன்ற ஆடம்பர நுகர்பொருட்களின் விற்பனையைத் தூக்கி நிறுத்துவதற்காக வங்கிகளின் கஜானாவை அகலமாகத் திறந்து வைத்தார். தனிநபர் கடன் (personal Loan), கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு (Debit Card) என்ற வகைகளில் வங்கிப் பணம் சந்தையில் கொட்டப்பட்டு, செயற்கையாகப் பணப்புழக்கம் ஏற்படுத்தப்பட்டது. வீட்டுக்கடன் மூலம் ''ரியல் எஸ்டேட்'' வியாபாரம் ஊதிப் பெருக்க வைக்கப் பட்டது.

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ. 45/-க்குக் கீழாகக் குறைந்து போனால், ஏற்றுமதி வர்த்தகம் பாதிக்கப்படும் என்ற காரணத்தால், ரிசர்வ் வங்கி, கடந்த ஒரு ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 2 இலட்சம் கோடி ரூபாயை இறக்கிவிட்டு, அமெரிக்க டாலரின் மதிப்பு இந்திய நிதிச் சந்தையில் சரிந்து விடாமல் காப்பாற்றியது. அபரிதமான பணப்புழக்கத்தின் பின்னுள்ள உண்மை இதுதான்.

சந்தையில் புழக்கத்துக்கு வரும் பொருட்கள் - சேவைகளின் மதிப்பை விட, பணப்புழக்கம் ஓரளவு அதிகமாக இருந்தால்தான், பொருட்களின் விலை உயர்ந்து, முதலாளிகளுக்கு நல்ல இலாபம் கிடைக்கும் என்பதுதான் முதலாளித்துவ பொருளாதார விதி. செயற்கையான பணப்புழக்கத்தின் மூலம் இந்த விதி ஊதிப் பெருக்கப்பட்டதால், தரகு முதலாளிகள்-ஏற்றுமதி வர்த்தகர்களின் இலாபம் எகிறிப் பாய்ந்தது. இந்தப் பணப்பழக்கத்தால் இலாபம் அடைந்த புதுப் பணக்காரக் கும்பல் கண்ணில் பட்டதையெல்லாம் வாங்கிக் குவித்த பொழுது, சராசரி வருமானமுள்ள இந்திய மக்களோ, தங்களின் தேவைகளைச் சுருக்கிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப் பட்டனர்.



சத்தான உணவின்றி நோஞ்சானாக, நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் குழந்தை: இதுவா பொருளாதார வளர்ச்சி?

செயற்கையாகப் பணப்புழக்கம் உருவாக்கப்பட்டதைப் போலவே, உணவுப் பொருள் உற்பத்தியில் தேக்க நிலையும் திட்டமிடப்பட்டே உருவாக்கப் பட்டது. இந்திய உணவுக் கழகத்திடம் ஜூலை 02-இல் 6 கோடியே 30 இலட்சம் டன் உணவு தானியம் (அரிசியும், கோதுமையும்) கையிருப்பில் இருந்தது. இந்தக் கையிருப்பு அடுத்த மூன்றே ஆண்டுகளில் சடசடவெனச் சரிந்து, கோதுமை இருப்பு ஏப்ரல் 2005-இல் 1 இலட்சம் டன் என்ற அளவிற்கு வீழ்ந்தது.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மக்களுக்குத் தாராளமாக ரேஷன் கடைகள் மூலம் உணவுப்

படிப்பகம்

www.padippakam.com

பொருள் விநியோகிக்கப்பட்டதால் இந்தச் சரிவு ஏற்படவில்லை. அபரிதமாகக் கையிருப்பில் உள்ள உணவு தானியங்களைக் கொண்டு, நாடு முழுவதும் வேலைக்கு உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் எனப் பொருளாதார வல்லுநர்கள் கொடுத்த ஆலோசனையை, அப்பொழுது பிரதமராக இருந்த வாஜ்பாயி ஒதுக்கித் தள்ளினார்.

வேலைக்கு உணவுத் திட்டத்திற்கு மாறாக, பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் 2.99 கோடி டன் உணவு தானியங்கள் மிகக் குறைந்த விலையில் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதற்காக, 14,135 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டது. 1.87 கோடி டன் உணவு தானியங்கள் உள்ளூர் பெரிய வியாபாரிகளிடம் விற்கப்பட்டது. 1.47 கோடி டன் உணவு தானியங்கள் கடத்தப்பட்டு மறைந்து போயின.

இப்படி உணவு தானியக் கையிருப்பு மொட்டையடிக்கப்பட்ட அதே சமயம், அரசு கொள்முதல் அதிரடியாகக் குறைக்கப்பட்டது. 2005-06-இல், 1.85 கோடி டன் கோதுமை தேவை என்ற நிலையில், 1.47 கோடி டன் கோதுமைதான் கொள்முதல் செய்யப்பட்டது. 2006-07-இல் 1.9 கோடி டன் கோதுமை தேவை என்ற நிலையில் 90 இலட்சம் டன் தான் கொள்முதல் செய்யப்பட்டது.

இதன்மூலம், அரிசி, கோதுமை பயிரிட்ட விவசாயிகள், தங்களின் விளைச்சலைத் தனியாரிடம் விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். தனியார் கொள்முதலை ஊக்குவிக்கும் முகமாக, பன்னாட்டு நிறுவனங்கள் உணவு தானியக் கிட்டங்கிகளைத் திறந்து நடத்த அனுமதிக்கப்பட்டனர். உணவு தானியங்களை வாங்கிப் பதுக்கிக் கொள்வதற்கு வசதியாக, அத்தியாவசிய உணவுப் பொருள் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டன. இணைய தள முன்பேர வர்த்தகத்தில் வியாபாரம் செய்வதற்கு அரிசிக்கும், கோதுமைக்கும் இருந்த தடை நீக்கப்பட்டது.

இதற்கு இணையாகவும், அரிசி, கோதுமை பயிரிடும் விவசாயிகளை அச்சாகுபடியில் இருந்து அப்புறப்படுத்தும் விதமாகவும், "உணவுப் பொருள் உற்பத்தியில் நாம் தன்னிறைவு அடைந்துவிட்டோம்; எனவே, விவசாயிகள் மலர் சாகுபடி போன்ற பணப்பயிர் உற்பத்தியில் ஈடுபட



தில்லியின் ஜமா மசூதி பகுதியில் கூலி வேலைக்காகக் காத்திருக்கும் தொழிலாளர்கள்: நிச்சயமற்ற வாழ்க்கை.

வேண்டும்" என்ற பிரச்சாரம் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியிலும், அதற்கு அடுத்து வந்த காங். கூட்டணி ஆட்சியிலும் தீவிரமாகச் செய்யப்பட்டது; உற்பத்திச் செலவை ஈடுகட்டும் வகையில் அரிசிக்கும், கோதுமைக்கும் நிர்ணயிக்க வேண்டிய ஆதார விலையை ஏற்றித் தராமல் இருப்பது; இடுபொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தாமல் வேடிக்கைப் பார்ப்பது — இவற்றின் மூலம் உணவு தானிய விவசாயிகள் அச்சாகுபடியில் நம்பிக்கை இழக்க வைக்கப்பட்டுள்ளனர்.

மைய அரசின் இந்த விவசாய விரோத நடவடிக்கைகளால், 1999-2000-இல் 7.63 கோடி டன்னாக இருந்த கோதுமை உற்பத்தி 2005-06-இல் 6.94 கோடி டன்னாகக் குறைந்தது. அரிசி, பருப்பு உள்ளிட்ட உணவு தானியங்களின் மொத்த உற்பத்தி 21.2 கோடி டன்னில் இருந்து (2003-04) 20.9 கோடி டன்னாகக் (2006-07) குறைந்துவிட்டது. செயற்கையாக உருவாக்கப்பட்ட இந்தப் பற்றாக்குறை / தட்டுப்பாட்டைக் காரணம் காட்டி, கடந்த ஆண்டு கோதுமை இறக்குமதிக்கு அனுமதி அளித்து, உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளையை நிறைவேற்றியது, காங்கிரசு கூட்டணி ஆட்சி.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த அத்தியாவசிய உணவுப் பொருட்களை அனைவருக்கும் ரேசன் கடைகளின் மூலம் விநியோகிப்பது; அரிசி, கோதுமை, பருப்பு, எண்ணெய் வித்துக்கள் ஆகிய உணவுப் பொருட்களின் உற்பத்திக்கு ஊக்கமளிப்பதோடு, அவற்றை அரசு கொள்முதல் செய்வதை விரிவுபடுத்துவது; தனியார் கொள்முதலுக்கும், ஊக பேர வாணிபத்துக்கும், நல்ல விளைநிலங்களை விழுங்கும் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்துக்கும் தடை போடுவது ஆகிய நடவடிக்கைகளுக்கு மாறாக, உணவுப் பொருட்களைத் தாராளமாக இறக்குமதி செய்வதை நிரந்தரமாக்கத் திட்டம் போடுகிறது காங். கூட்டணி ஆட்சி. இதற்கு ஏற்றாற்போல, பட்ஜெட்டில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீதான சுங்கவரி குறைக்கப்பட்டுள்ளது.

இந்த தாராள இறக்குமதிக் கொள்கை, உணவு உற்பத்தியில் இந்தியா அடைந்துள்ள தன்னிறைவுத் திறனைச் சிறுகச் சிறுகச் சாகடித்து விடும்; அதன்மூலம் உணவுப் பொருள் தட்டுப்பாட்டையும், விலைவாசி உயர்வையும் நிரந்தரமாக்கும். இந்திய மக்களை உணவுக்காக ஏகாதிபத்திய நாடுகளிடம் கையேந்த வைப்பதன் மூலம் தாராளமயம் - தனியார்மயம் என்ற பெயரில் திணிக்கப்படும் மறுகாலனியாதிக்கம் தீவிரமாகும்.

எதிர்கட்சி வரிசையில் உள்ள பா.ஜ.க., அ.தி.மு.க. மட்டுமல்ல, ஆளுங்கட்சி கூட்டணியில் உள்ள இடது, வலது போலி கம்யூனிஸ்டுகளும் விலைவாசி உயர்வை எதிர்ப்பதாக நாடகமாடுகின்றன. இக்கட்சிகள் காங். கட்சியின் தவறான பொருளாதாரக் கொள்கைதான் விலைவாசி உயர்வுக்குக் காரணம் எனக் கூறுவதன் மூலம், விலைவாசி உயர்வுக்குப் பின்னுள்ள உண்மையான காரணத்தை - மறுகாலனியத் தாக்குதலை மூடி மறைக்கின்றன. நாம் இந்த உண்மையான காரணத்தை மக்கள் முன் அம்பலப்படுத்தும்பொழுதுதான், ஆளும் காங்கிரசை மட்டுமல்ல; மக்களின் அதிருப்தியை ஓட்டுக்களாக அறுவடை செய்யக் காத்திருக்கும் எதிர்க்கட்சிகளையும் தனிமைப்படுத்த முடியும்; மக்களின் கோபத்தை மறுகாலனியத்துக்கு எதிரான போராக மாற்ற முடியும்!

● ரஹீம்

படிப்பகம்

www.padippakam.com

# சென்னை சங்கமம்

# தி.மு.க. கம்பெனியின் புதிய வியாபாரம்

தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் இருந்து நாட்டுப்புறக் கலைஞர்களை சென்னைக்கு வரவழைத்து, பொது நூலகத் துறை, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை உதவியுடன் தமிழ் மையம் எனும் தன்னார்வ நிறுவனம், "சங்கமம்" எனும் பெயரில் பிப்.20-ஆம் தேதி தொடங்கி பிப்.26 முடிய, 6 நாட்களில் 400 நிகழ்ச்சிகளை, சென்னையின் மூலைமுடுக்கெல்லாம் நடத்தியது.

கரகாட்டம், தப்பாட்டம், செண்டா மேளம், இவற்றுடன் சுதா ரகுநாதனின் கர்நாடக சங்கீதக் கச்சேரி என கதம்பமாக நடந்த இந்நிகழ்ச்சி, அந்நிய சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக நடத்தப்பட்டதாக அரசு அறிவித்தது.

"திருவிழா - நம்ம தெருவிழா" எனும் விளம்பரத்துடன் பல கோடி செலவில் நடந்த இவ்விழாவை ஒருங்கிணைத்தவர், கருணாநிதியின் மகள் கனிமொழி. இதற்கான விளம்பரம், நிகழ்ச்சி ஏற்பாடு ஆகியவற்றுக்கு அரசுப் பணம் தாராளமாய் செலவிடப்பட்டது. வழக்கமான அரசு விழாக்களுக்கு செலவிடப்படும் விளம்பரச் செலவின் வரம்பு, சங்கமத்திற்கென்றே ஓர் அரசாணை மூலம் தளர்த்தப்பட்டது. தங்குதடையின்றி வந்த விளம்பரப் பணம், பெரும் பத்திரிக்கை முதலாளிகளின் பையை மட்டும் தானே நிறைக்கும்! பத்திரிக்கை நிருபர்களுக்கு? கனிமொழி பற்றி 'கவர் ஸ்டோரி' எழுத என ரூபாய் 2,000-ஐ கவரில் வைத்துத் தந்தார்கள்.

கனிமொழியின் தாயார் ராஜாத்தி இல்க்கிய அரங்கு ஒன்றை குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். ஸ்பென்சர் பிளாசா, கடற்கரை, பூங்காக்கள் எனப் பல்வேறு இடங்களிலும் நாட்டுப்புற கலைஞர்கள், 'கலைஞ'ரின் மகளுக்கு மட்டும் இன்றி, கலைஞரின் 7 வயதுப் பேரனுக்கும் சலாம் வைத்தனர். அன்று பண்ணையார் வீட்டு நாய்க்குட்டிக்கும் பயந்து வாழ்ந்த விவசாயக் கூலிகளின் அவல நிலைதான் நெஞ்சில் நிழலாடியது. கவிஞர் இளைய பாரதி, ராசாத்தி அம்மையாரை மேடையிலே 'சின்னம்மா' என அழைத்து தன் பெயரை கலைஞரின் இதயத்தில் பொறித்துவிட்டார்!

தமிழ் மையத்தின் நிறுவனரான கஸ்பார் ஈழத் தமிழர்களுடன் வெரித்தாஸ் வானொலியில் பணியாற்றியதை மையாக்கி 'புலிகளுடன் தொடர்புடையவர்கள் கனிமொழியுடன் இணைந்து நடத்திய விழா' என்றும், சங்கமம் விழா வழியாக புலிகளுக்குப் பணம் சென்றிருக்கின்றது என்றும் அறிக்கை விட்டு, மீண்டும் விடுதலைப் புலிகள், பயங்கரவாதம்' என்று பீதி கிளப்பினார் ஜெயலலிதா. ஜெயலலிதாவின் இந்த

சென்னை சங்கமத்தில் நடந்த தப்பாட்டம்.



பயங்கரவாதப் பீதிக்கு துக்ளக் சோவும், ஜூனியர் விகடனும் பக்க மேளம் வசித்து, சங்கமம் நிகழ்ச்சியை விமர்சிக்கும் போர்வையில் தங்களது பார்ப்பன அரிப்பைச் சொறிந்து கொண்டனர். சாதாரண பால்ரஸ் குண்டுகள் பிடிபட்டதற்கே 'வெடிகுண்டு செய்யப் பயன்படும் இரும்பு குண்டுகள் புலிகளுக்கு கடத்தல்' என்று பேனைப் பெருமாளாக்கும் துக்ளக்கும், ஜூ.வி.யும், ஜெயலலிதாவும் இணைந்து சங்கமத்திற்கும், கஸ்பாருக்கும் உள்ள உறவை, அமெரிக்காவில் கைதாகியுள்ள சாக்ரடீஸ் எனும் ஈழ ஆதரவாளர் வரை இணைத்து கருணாநிதி அரசுக்கு நெருக்கடி தர முயல்கின்றனர்.

சங்கமத்தில் தப்பாட்டம் உள்ளிட்ட நாட்டுப்புறக் கலைகள் இடம் பெற்றதாலோ என்னவோ, 'சோ' எனும் பார்ப்பன அறிவுஜீவி, "இக்கலைகளைக் கிராமத்துக் கோவில் திருவிழாக்கள் ஏற்கெனவே காத்து வருகின்றன. எனவே, இதற்கென பொதுமக்கள் பணத்தை வீணாக்கக் கூடாது" என விமர்சித்துள்ளார். உழைக்கும் மக்களின் இசையையும், நடனத்தையும், காலங்காலமாய் இழிவுபடுத்தும் பார்ப்பனிய அழகியலின் விமர்சனம் தான் அது. இத்தகைய கேடுகெட்ட காமாலைக் கண்ணுக்கு, வானொலியும், தூர்தர்சனும் தொடங்கப்பட்ட நாளில் இருந்து அக்கிரஹாரத்தின் கர்நாடக சங்கீதக் கச்சேரி, பரத நாட்டியம் நிகழ்ச்சிகளை வழங்கி (sponsor), பொதுமக்கள் பணத்தைச் சூறையாடி வருவதும் தெரியாது. அரசுப் பணத்தில் பத்மா சுப்ரமணியம் போன்ற பார்ப்பன நடனமணிகள் கோனார்க் கோவிலில் ஆட்டம் போட, கோடிகளை 'ஸ்வாஹா' செய்ததும் தெரியாது.

ஏற்கெனவே பேரனை மத்தியிலும், மகனை மாநிலத்திலும், கட்சியிலும் பதவிகளால் அலங்கரித்து வைத்துள்ள கருணாநிதி, தனது மகளையும் சங்கமம் மூலம்

www.padippakam.com

வாரிசு அரசியலையும் அரங்கேற்றி அழகு பார்த்துள்ளார். சங்கமம் தொடக்க விழாவில் ''எனது வழித்தோன்றலாக கலை, இலக்கியத்தில் எனக்குப் பிறகு அப்பணியை ஆற்றிட ஒரு வழித்தோன்றல் உருவாகி இருக்கின்றது'' என்று அவர் உள்ளம் பூரித்துச் சொன்னதே இதற்குச் சான்று. ஓட்டுக் கட்சிகள் எவையும் இதனை விமர்சனம் செய்வதற்கு யோக்கியதை கிடையாது. அ.தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. போன்ற மாநிலக் கட்சிகளும் சரி, காங்கிரசு, பா.ஜ.க போன்ற தேசியக் கட்சிகளும் சரி, தனக்குப் பிறகும் அரசுப் பணத்தை ஆண்டு அனுபவிக்க தனது வாரிசுகளை உருவாக்குவதில் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல.

சங்கமத்திற்கு பொருள் ரீதியில் உதவிய தமிழ் மையம் அமைப்பில் யார் யார் உள்ளனர் எனப் பார்த்தால் படித்த பட்டதாரிகளை குறைந்த கூலிக்கு பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் அனுப்பி வைக்கும் 'மா∴போய்'' நிர்வாகவியல் நிறுவன அதிபர் பாண்டியராஜன், நட்சத்திர அந்தஸ்து மருத்துவமனை மூலம் மருத்துவ வணிகம் நடத்தி வரும் மியாட், நெதர்லாந்து நாட்டின் கவுரவத் தூதர் என ஒரு வானவில் கூட்டணியே உள்ளது. இவர்களுக்கும், சங்கமத்தில் பங்கெடுத்துக் கொண்ட ∴போர்டு பவுண்டேசனின் கூத்துப் பட்டறைக்கும், நசிந்து கொண்டு வரும் தமிழர் பாரம்பரியக் கலைகள் மீது அப்படி என்னதான் ஆர்வம்?

கருணாநிதியும் கூட இந்தக் கூட்டணியுடன் சேர்ந்திசைந்து ''தமிழர் கலைகள் அழிந்துவிடாமல் காக்கப்படல் வேண்டும்'' என்று பேசுகிறார். தமிழ் மையத்தின் சார்பில் இனி ஆண்டுதோறும் பொங்கல் விழாவின்போது சென்னை சங்கமம் நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்கிறார், கனிமொழி.

இவ்வாறு ஆண்டுக்கு ஒருமுறை அள்ளித் தெளித்தவாறு அவசர கதியில் அரசே ஏற்று நடத்துவதால் மட்டும் தமிழர் கலைகளைக் காப்பாற்றி விட முடியுமா? அதன் உள்ளடக்கமாக இருக்கும் பெண்ணடிமைத்தனம், புராணப் புளுகுகள் போன்றவை, இன்றைக்குத் தேவைப்படும் பார்ப்பன எதிர்ப்புணர்வு, ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகிய முற்போக்கான கருத்துக்களால் மாற்றப்படாவிட்டால், எந்த அடித்தட்டு, நடுத்தர மக்களும் ''வாலிவதம்'' ''வள்ளி திருமணம்'' போன்றவற்றுக்கு ஆதரவு தரப் போவதில்லை. வடிவத்தை மட்டும் நாட்டார் கலைகளில் இருந்து சுவீகரித்துக் கொண்டு முற்போக்கு சிந்தனைகளை கலைவடிவத்தில் தந்தால் மட்டுமே தமிழர் கலைகள் பிழைக்க முடியும். இல்லாவிட்டால் கூத்துப்பட்டறை தயாரிக்கும் 50 பேர் மட்டுமே பார்த்து ரசிக்கும் 'செத்த கலை'யாக மாறிவிடும்.

பெரும்பாலான தமிழர் கலைகள் இன்றைக்கு மரணப் படுக்கையில்தான் உள்ளன. சங்கமத்திற்கு எனப் பேருந்துகளில் அழைத்து வரப்பட்ட கலைஞர்கள், ''சாப்பாட்டுக்கு மட்டும் பஞ்சமே இல்லை, கனிமொழி அம்மா புண்ணியத்திலே'' எனச் சொல்லும் நிலையில் தான் உள்ளனர். இது ஏதோ தற்செயலாக நடைபெற்றுவிட்ட செயலல்ல. நாட்டார் கலைகளின் பிறப்பிடமான விவசாயப் பொருளாதாரம் சூறையாடப்படுவதால், தமிழர்கள் நிலத்திலிருந்து துரத்தப்பட்டு, காய்ந்த சருகு காற்றில் பறப்பது மாதிரி வயிற்றைக் கழுவிக் கொள்ள ஏதாவது ஒரு தொழிலைப் பார்ப்போம் என்று பெருநகரங்களுக்கும், அண்டை மாநிலங்களுக்கும் ஓடுகின்றனர். பறிக்கப்படும் அவர்களின் நிலங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாகின்றன. ஓர் இனத்தின் அன்றாட வாழ்வோடு பிணைந்திருப்பதுதானே அவ்வினத்தின் கலைகள்? தமிழன் மட்டும் பஞ்சைப் பராரியாய் ஆக்கப்படுகையில், தமிழ்க் கலைகள் மாத்திரம் காக்கப்படுமா என்ன?

உழைக்கும் மக்களின் நலனைக் கொள்ளையிடும் ஒரு கூட்டம், அவர்களின் நலனில் அக்கறை உள்ளவர்களாகக் காட்டிக் கொள்ள முயலும் நரித்தந்திரம் இப்போது அனைத்து மட்டங்களிலும் நடைமுறையில் உள்ளது. நம் நாட்டின் நிலத்தடி நீரை ஒட்ட உறிஞ்சி, நீராதாரத்தை அழித்து வரும் கோக்கோ கோலா, சென்னைப் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசக் குடிநீர் வழங்கும் திட்டத்தையும் அறிமுகம் செய்கிறது. அந்த வரிசையில், சங்கமம் எனும் பெயரில் தன்னார்வக் குழுக்களும், சில தரகு முதலாளிகளும், அரசும் இணைந்து தமிழர் கலைகளைக் காக்கப் புறப்பட்டிருப்பதும், அதன் மூலம் அந்நிய செலாவணியை ஈட்டவும் கண்டுப் பிடித்திருக்கும் சடங்கே 'சங்கமம்'.

உலகமய, தாராளமயக் கொள்கையால் கஞ்சித் தொட்டி நோக்கித் தள்ளப்படும் நெசவாளர்களின் பாரம்பரிய தறி நெசவை, 'காட்சிப் பொருளாக்கிய' சங்கமத்தின் நிகழ்ச்சி ஒன்றே போதும், சங்கமத்தின் நோக்கம் என்னவென்பதைப் புரிந்து கொள்வதற்கு!

● கவி

---

**தலையங்கம் தொடர்ச்சி...**

புரளுகிறது. இவைதவிர, போட்டிகளை நடத்தப் பொறுப்பேற்கும் பெப்சி, கோக், எல்.ஜி., சாம்சங், ஹோண்டா போன்ற பல பன்னாட்டு - உள்நாட்டு தொழில் கழகங்கள், அவற்றின் உற்பத்திப் பொருள் விளம்பரங்களுக்காக வாரி இறைக்கும் தொகை பலப்பலகோடி ரூபாய்கள். அதனால் தான் உலகக் கோப்பைப் போட்டிகளில் இந்தியாவும் பாகிஸ்தானும் தோல்வியடைந்ததால் பல ஆயிரம் கோடி ரூபாய் நட்டமடைந்த பன்னாட்டு தொழிற்கழகங்களும், செய்தி ஊடகங்களும் கிரிக்கெட் ரசிகர்களைவிடப் பன்மடங்கு ஆத்திரமடைந்துள்ளன.

ஆங்கிலேயப் பிரபுக் குலத்தின், மேட்டுக்குடி சீமான்களின் சோம்பேறித்தனமான பொழுது போக்கு விளையாட்டாகத் தொடங்கிய கிரிக்கெட், பன்னாட்டுத் தொழில்கழகங்களின் விளம்பர - வியாபார ஊடகமாகவும், கருப்புப்பண சூதாடிகளின் விளையாட்டாகவும் வளர்ச்சியுற்றிருக்கிறது. மேலும், ஆங்கிலேயக் காலனி நாடுகளாக இருந்த நாடுகளில் மட்டுமே, அந்த அவமான அடிமைச் சின்னமாக இது விளையாடப்பட்டு வருகிறது. விடுதலைப் போராட்ட உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டு மேலைநாகரிக, ஆங்கில மோகம் ஊட்டி வளர்க்கப்படுவதைப் போல கிரிக்கெட் மோகம் வளர்க்கப்படுகிறது.

விளையாட்டு என்பது வெறுமனே உடற்பயிற்சிக்கானதாகவும், கேளிக்கை பொழுதுபோக்கிற்கானதாகவும், வியாபார - சூதாட்டக்களமாகவும் இருக்கக் கூடாது. சமூக நலனை முன்னிறுத்தி சமூக மறுஉற்பத்திக்கான மறு ஆக்கம் தருவதாக இருக்கவேண்டும். விளையாட்டையே தனித் தொழிலாகக் கொண்ட வீரர்களும், அதையே பந்தயம், சூதாட்டமாகவும், வியாபாரம் - விளம்பரமாகவும் நடத்தும் தொழில்முறை சோம்பேறிக் கும்பலும் சமூகத்திற்கு ஒட்டுண்ணிகளாகவே இருக்க முடியும். அத்தகைய கேடு விளைவிப்பதாக இருக்கும் கிரிக்கெட் விளையாட்டை, குதிரைப் பந்தயம், சூதாட்ட விடுதிகள், இலாட்டரி, ஆபாசக் களிவெறியாட்ட விடுதிகள் போன்றவை எவ்வாறு ஒழிக்கப்பட வேண்டியவையோ, அதைப்போல கருதி ஒழிப்பதற்கு உழைக்கும் மக்கள் போராட வேண்டும். ●

www.padippakam.com

## பிரிக்கால் தொழிலாளர் போராட்டம்

# பாதிக் கிணறு தாண்டினால் போதுமா?

**கோ**வை நகரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் பிரிக்கால் நிறுவனம், கார், இரு சக்கர வாகனங்களுக்குத் தேவையான மீட்டர்களைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது. இந்தியாவில் 6 தொழிற்கிளைகள், இந்தோனேஷியாவிலும், ஈரானிலும் தலா ஒரு தொழிற்கிளை என வளர்ந்துள்ள பிரிக்கால் நிறுவனம், ஆட்டோ மீட்டர் சந்தையில் 46 சதவீதத்தைக் கைப்பற்றி ஏகபோக ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ''பிரிக்காலை ஒரு பன்னாட்டு நிறுவனமாக வளர்க்க வேண்டும் என்பதே எங்களின் நோக்கம்'' என்கிறார் பிரிக்காலின் செயல் இயக்குநர் வனிதா மோகன். எனவே, இந்த நோக்கத்தை ஈடேற்றிக் கொள்ளும் வகையில் பிரிக்காலின் தொழிலாளர்கள், அதீத உற்பத்தி இலக்கு வைத்துக் கசக்கிப் பிழியப்படுவதோடு, எவ்விதத் தொழிற்சங்க உரிமைகளும் அற்றக் கொத்தடிமைகள் போல நடத்தப்பட்டு வருகின்றனர்.

சிறு பொறி பெருங்காட்டுத் தீயை மூட்டும் என்பதற்கு ஏற்ப, குமுறிக் கொண்டிருந்த தொழிலாளர்கள், கடந்த மார்ச் மாதம் ஆறு முன்னணித் தொழிலாளர் கோவையில் இருந்து உத்தராஞ்சல் மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைக்கு அதிரடியாக மாற்றம் செய்யப்பட்டதையடுத்து, வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், அதிரடி இடமாற்றத்தை ரத்து செய்யக் கோரி, மார்ச் 9 அன்று நடத்திய 18 மணி நேர சாலை மறியல் போராட்டம், பிரிக்கால் நிறுவனத்தை மட்டுமல்ல, கோவையைச் சேர்ந்த பெரும் முதலாளிகள் அனைவரையும் கதிகலங்க வைத்து விட்டது. இச்சாலை மறியல் போரில் கலந்து கொண்ட 1,000-க்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் உள்ளிட்டு, 2,166 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

**இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பிரிக்கால் தொழிலாளர்கள் கோவை-மேட்டுப்பாளையம் சாலையை மறித்து நடத்திய போராட்டம்.**



''உற்பத்திச் செலவு குறைவதற்குத் தகுந்தப்படி தான் தொழிலாளர்களின் சம்பள உயர்வு நிர்ணயிக்கப்படும்'' என்ற கொடூரமான நிபந்தனையின் அடிப்படையில், பிரிக்கால் பிளாண்ட்-1-இல், 2004-ஆம் ஆண்டு ஊதிய ஒப்பந்தம் போடப்பட்டது. இதே நிபந்தனையுடன் கூடிய ஊதிய ஒப்பந்தம், 2003-இல் பிளாண்ட்-3-இல் போடப்பட்டது. மூலப்பொருட்களின் விலை உயர்வை ஈடுகட்டவும், இலாபம் சரிந்து விடாமல் இருக்கவும் தொழிலாளர்களின் கூலியில் கை வைக்கும் நரித்தனம்தான் இந்த ஒப்பந்தம். தொழிலாளர்களின் அடிமடியிலேயே கை வைக்கும் இந்த ஒப்பந்தத்தில், ஐ.என்.டி.யு.சி., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., உள்ளிட்டு ஐந்து தொழிற்சங்கங்கள் கையெழுத்துப் போட்டு, பிரிக்கால் தொழிலாளர்களுக்குத் துரோகமிழைத்தன.

இதுவொருபுறமிருக்க, 14 ஆண்டுகளாக வேலை பார்த்து வரும் 1,500 தொழிலாளர்களை நிரந்தரமாக்காமல் தினக்கூலிகளாக வைத்திருப்பது; பெண் தொழிலாளர்களை மிரட்டி ''ஓவர்டைம்'' வேலை செய்ய வைப்பது; தொழிற்சாலைக்குள் நடக்கும் விபத்துக்களுக்கு, அவ்விபத்தில் பாதிக்கப்படும் தொழிலாளிகளையே பொறுப்பாக்குவது என்பது தொடங்கி, உணவகத்தில் நடக்கும் முறைகேடுகளைத் தட்டிக் கேட்கக் கூடாது; சாப்பிட்ட பிறகு, தொழிலாளர்கள் டிஃபன் பாக்சைத் தண்ணீர் ஊற்றிக் கழுவக் கூடாது; ஒதுக்குப்புறமாகப் போய்க் கூட சிகரெட் பிடிக்கக் கூடாது என்பது வரை பல்வேறுவிதமான அடக்குமுறைகளும், கெடுபிடிகளும், ''கட்டுப்பாடு'', ''நாகரீகம்'' என்ற பெயரில் தொழிலாளர்கள் மீது திணிக்கப்பட்டன. நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களுள் (சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி.) ஒன்றுகூட, இந்த அடக்குமுறையைத் தட்டிக் கேட்காமல், நிர்வாகத்திற்கு ஒத்து ஊதி வந்தன.

பிரிக்கால் நிறுவனத்தின் இந்த அடக்குமுறைகளைத் தட்டிக் கேட்கவும்; தங்களின் தொழிற்சங்க உரிமைகளை மீட்டெடுக்கவும், இத்துரோகத் தொழிற்சங்கங்களை அடியோடு புறக்கணிக்க வேண்டும் என உணர்ந்து கொண்ட தொழிலாளர்கள், இந்த ஆண்டின் தொடக்கத்தில் ''கோவை மாவட்ட பிரிக்கால் தொழிலாளர் தொழிற்சங்கம்'' என்ற புதிய சங்கத்தைக் கட்டியமைத்ததோடு, பெருவாரியான தொழிலாளர்கள் அதில் தங்களை இணைத்தும் கொண்டனர். இப்புதிய தொழிற்சங்கத்துக்கு, இ.பொ.க. (மா-லெ) விடுதலை குழுவின் கீழ் இயங்கி வரும் அகில இந்திய தொழிற்சங்க மைய கவுன்சில் வழிகாட்டி வருகிறது.

இப்புதிய தொழிற்சங்கத்தை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்ற தீய நோக்கத்தோடுதான், ஆறு முன்னணித் தொழிலாளர்களைத் தடாலடியாக வேறு மாநிலத்திற்குத் தூக்கியடித்தது நிர்வாகம். இதன் மூலம், மற்ற தொழிலாளர்கள் பயந்து போய் ஒதுங்கி விடுவார்கள் என எதிர்பார்த்தது. ஆனால், பிரிக்கால் தொழிலாளர்களோ, ஆறு தொழிலாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்ட மறுநாளே உள்ளிருப்புப் போராட்டத்தில் குதித்து, நிர்வாகத்திற்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர். அடாவடித்தனமான இடமாற்றலை ரத்து செய்யக் கோரி, மார்ச் 4-ஆம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை நடத்தி வருகின்றனர்.

புதிய தொழிற்சங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்த மாட்டோம் என்ற

www.padippakam.com

நிர்வாகத்தின் அடாவடித்தனத்தை, தொழிலாளர்களின் உறுதிமிக்க போராட்டம் உடைத்தெறிந்துவிட்டது. புதிய தொழிற்சங்கத்தோடு மூன்று முறை நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியடைந்து விட்டபோதும், தங்களின் கோரிக்கையை நிர்வாகம் ஏற்காதவரை வேலைக்குத் திரும்புவதில்லை என்ற உறுதியோடு பிரிக்கால் தொழிலாளர்கள் ஒரு மாத காலமாக வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

தொழிற்சங்க உரிமைகள் பறிக்கப்படுவது பிரிக்கால் நிறுவனத்தில் மட்டுமே நடக்கும் ''அதிசயம்'' கிடையாது. தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் வழங்க வேண்டும் என்ற கட்டுப்பாடே இருக்கக் கூடாது என்பது தொடங்கி தொழிற்சங்கமே இருக்கக் கூடாது என்பது வரை தொழிற்சங்க உரிமைகள் அனைத்தையும் பறிக்கக் கோருகிறது, உலகமயம். இதற்கு ஏற்றாற்போலத்தான், தொழிலாளர் நலச்சட்டங்கள் திருத்தப்படுகின்றன; தொழிற்சங்கமே அமைக்க முடியாத படி சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

தொழிலாளி வர்க்கமே ஒன்று திரண்டு போராடினால்தான், தொழிற்சங்க உரிமைகள் சட்ட பூர்வமாகவே பறிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த முடியும். போராடும் பிரிக்கால் தொழிலாளர்கள் இதை உணர்ந்து, இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை, புனே, குர்கான், உத்தராஞ்சல் ஆகிய இடங்களில் உள்ள பிரிக்கால் தொழிற்சாலைகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

''கட்டுப்பாடு'' என்ற பெயரில் பிரிக்கால் நிர்வாகம் ஏவிவிடும் அடாவடித்தனங்களையும்; சுனாமி நிவாரண நிதி என்ற பெயரில் அந்நிர்வாகம் தொழிலாளர்களிடம் நடத்திய கொள்ளையையும்; வசூலித்த பணத்தைக் கொடுக்காமல் அரசை ஏமாற்றியதையும்; ''சிறு துளி'' என்ற அமைப்பு மூலம் பிரிக்காலின் செயல் இயக்குநர் வனிதா மோகன் அரசு பணத்தைச் சுருட்டுவதையும் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி, பிரிக்காலுக்கு எதிரான பொதுக் கருத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

பிரிக்கால் தொழிலாளர் போராட்டம் நசுக்கப்பட வேண்டும் என மற்ற முதலாளிகள் விரும்புவதால், துணியாலை, பஞ்சாலை, இன்ஜினியரிங் தொழிலாளர்கள் இப்போராட்டத்திற்கு ஆதரவாகக் களத்தில் நிற்கும் வண்ணம் கோவை மாவட்டத் தொழிலாளர்கள் - தொழிற்சங்கங்கள் மத்தியில் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

வேலை நிறுத்தப் போராட்டத்தை உறுதியோடு தொடர்வதோடு, உலகமயச் சூழலில் இப்படிப்பட்ட ஒற்றுமையையும், புதிய போராட்ட முறைகளையும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் தான் தொழிற்சங்க உரிமைகள் பறிக்கப்படுவதை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்த முடியும்.

**• பு.ஜ.தொ.மு., கோவை.**

# கொலைகார ''கோக்''கின் தருமதுரை வேடம்

**பே**ட்டை ரவுடிகளும் கிரிமினல் பேர்வழிகளும் சமூக விரோத கொலை பாதகச் செயல்கள் பலவற்றில் ஈடுபட்டுக் கொண்டே, தம்மைச் சுற்றியுள்ள ஏழைகளின் திருமணம், காதுகுத்தல், கோயில் திருவிழாக்கள் முதலானவற்றில் முக்கியப் பிரமுகராகக் கலந்து கொண்டு ''மொய்'' எழுதி, தமது ஆதரவு வட்டத்தைப் பெருக்கிக் கொள்வது வழக்கம். ஆட்டோ சங்கரிலிருந்து அயோத்திக்குப்பம் வீரமணி வரை எல்லாவகை பேட்டை ரவுடிகளின் கதையும் இது தான். தற்போது பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும் இதே உத்தியைப் பின்பற்றத் தொடங்கியுள்ளன. இதனை பெருந்தொழில் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு (Corporate Social Responsibility) என்று அவர்கள் பெருமையுடன் குறிப்பிடுகின்றனர். கொலைகார கோகோ கோலாவும் இந்த வழியில் 'சமூக சேவை' செய்யக் கிளம்பியுள்ளது.

சென்னை ரோட்டரி கிளப்பும் கோக் நிறுவனமும் இணைந்து சென்னையைச் சுற்றியுள்ள மாநகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்கப் போவதாக அறிவித்துள்ளன. முதற்கட்டமாக 100 பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு பள்ளியிலும் ரூ. 60,000 செலவில் நீரைச் சுத்திகரிக்கும் எந்திரங்கள் நிறுவப்படுமாம். இந்தப் பாதுகாப்பான குடிநீரை ஏழை மாணவர்கள் வீட்டுக்கும் எடுத்துச் சென்று குடிக்க வசதியாக 1 லிட்டர் பிளாஸ்டிக் தண்ணீர் குடுவையும் வழங்கப்படுமாம்.

திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், வேலூர் ஆகிய மாவட்டங்களிலும் விரிவுபடுத்தி, மகளிர் பள்ளிகளுக்கு முன்னுரிமை அளித்து, ''வாழ்வின் அமுதம்'' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த மூன்றாண்டுத் திட்டத்தின் தொடக்கவிழா கடந்த மார்ச் 5-ஆம் தேதியன்று சோஷியல் சர்விஸ் லீக் பள்ளியில், அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நடந்தது. விழாவில் பேசிய அமைச்சர் ''மாநிலம் முழுவதிலும் 6,103 பள்ளிகளில் குடிநீர் வசதியில்லை; அரசால் மட்டும் இந்த வசதியைச் செய்து தர இயலாது. பெருந்தொழில் நிறுவனங்களும் தன்னார்வ நிறுவனங்களும் இதற்கு உதவிட வேண்டும்'' என்று கோரி, பள்ளி மாணவர்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டிய அரசின் பொறுப்பைத் தட்டிக் கழித்துள்ளார். இதைச் சாதகமாக்கிக் கொண்டு பள்ளி மாணவர்களுக்கு குடிநீர் சேவை என்ற பெயரில், அடித்தட்டு உழைக்கும் மக்களை தனக்கு ஆதரவாகத் திரட்டிக் கொள்ளும் புதிய உத்தியுடன் கொலைகார கோக் கிளம்பியுள்ளது.

யாருக்கு யார் தானம் தருவது? நமது நாட்டின் இயற்கை வளமாகிய நிலத்தடி நீரையும் ஆற்று நீரையும் ஒட்ட உறிஞ்சி குடிநீர்ப் பஞ்சத்தைத் தோற்றுவித்தும், கேரளத்தின் பிளாச்சிமடாவைச் சுடுகாடாக்கியும், நெல்லை கங்கைகொண்டானின் கம்சனைப் போல உலகெங்கும் பலநூறு பேர்களைக் கொன்றும், நாட்டைச் சூறையாட வந்துள்ள கோக், இப்போது ஏழை மாணவர்களுக்காகக் கசிந்துருகுகிறது. கோக்கின் சமூக விரோதக் கொடுஞ்செயல்களையும் கொலைவெறியாட்டங்களையும் அமெரிக்கப் பல்கலைக் கழக மாணவர்கள் ''கொலைகார கோக்'' (www.killercoke.org) என்ற இணையதளத்தின் மூலம் தொடர்ந்து அம்பலப்படுத்தி வருகின்றனர். புதிய உத்தியுடன் கிளம்பியுள்ள கொலைகார கோக்கின் தருமதுரை வேடத்தை உழைக்கும் மக்களிடம் அம்பலப்படுத்தி முறியடிக்க, புரட்சிகர - ஜனநாயக சக்திகள் இன்னும் முனைப்பாகச் செயல்பட வேண்டியுள்ளது.

படிப்பகம்

# கோவை குண்டு வெடிப்பு
# தீர்ப்புக்கு முன்பே தண்டனை

**1993**-ஆம் ஆண்டு நடந்த மும்பய் குண்டு வெடிப்பு வழக்கில் 123 பேரைக் குற்றவாளிகளாகத் தீர்ப்பளித்திருக்கிறது, ''தடா'' சிறப்பு நீதிமன்றம். இவர்களுக்கான தண்டனை ஏப்ரல் மாதம் அறிவிக்கப்படும் எனத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''தாமதமாகக் கிடைக்கும் நீதி, நீதி மறுக்கப்படுவதற்குச் சமமானது'' என்பார்கள். மும்பய்க் குண்டு வெடிப்பு வழக்கில் 13 ஆண்டுகள் கழித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது; ஆனால், இக் குண்டு வெடிப்புக்கு மூல காரணமான மும்பய் கலவர வழக்கிலோ, இன்னும் முதல் தகவல் அறிக்கைகூடப் பதிவு செய்யப்படவில்லை.

மும்பய் குண்டு வெடிப்பில் 257 பேர் கொல்லப்பட்டனர். அதற்கு முன் நடந்த மும்பய் கலவரத்தில் 1,000 முசுலீம்கள் கொல்லப்பட்டதோடு; ஒரு இலட்சம் முசுலீம்கள் அகதிகளாகத் துரத்தப்பட்டனர். மும்பய் குண்டு வெடிப்பில் தொடர்புடைய குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு 10,000 பக்க அளவில் குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டது. அதேசமயம், மும்பய் கலவரம் சம்பந்தமான 1,370 வழக்குகள் உண்மையானவை என ஒப்புக் கொள்ளப்பட்டாலும், சாட்சியங்கள் சேகரிக்க முடியாது என நொண்டிக் காரணம் கூறப்பட்டு, அவ்வழக்குகள் குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டன.

மும்பய் கலவரத்தை விசாரித்த சிறீ கிருஷ்ணா கமிசன், இக்கலவரத்தைத் திட்டமிட்டு நடத்திய இந்து மதவெறிக் குண்டர்கள் தொடங்கி, அவர்களுக்குத் துணையாக நின்ற போலீசு அதிகாரிகள் உள்ளிட்டு, குற்றவாளிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு அடையாளம் காட்டியிருக்கிறது. இந்த அறிக்கை மீது நடவடிக்கை எடுப்போம் என வாக்குறுதி கொடுத்துதான் காங்கிரசு - தேசியவாத காங்கிரசு கூட்டணி மகாராஷ்டிராவில் ஆட்சியைப் பிடித்தது. கடந்த ஒன்பது ஆண்டுகளாக அம்மாநிலத்தில் ஆட்சி நடத்தி வரும் இம்மதச்சார்பற்ற கூட்டணி, இந்து மதவெறி பாசிஸ்ட் பால் தாக்கரேயை மட்டுமல்ல, சிறீ கிருஷ்ணா கமிசனால் குற்றம் சாட்டப்பட்டுள்ள 32 போலீசு அதிகாரிகளைக் கூடத் தண்டிக்காமல் பாதுகாத்து வருகிறது.

மும்பய் குண்டு வெடிப்பு வழக்கில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ள அனைவருமே மாஃபியா கும்பலைச் சேர்ந்தவர்கள் கிடையாது. ''மும்பய் கலவரத்தின்பொழுது எனது வீடு தீ வைத்துக் கொளுத்தப்பட்டதால்தான், மும்பய் - பிளாசா திரைப்பட அரங்கம் அருகே குண்டுகள் நிறைந்த வேனைக் கொண்டு போய் நிறுத்தியாக'' ஷாநவாஸ் குரேஷி ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். ''மும்பய் கலவரத்தைத் தொடர்ந்து எனது குடும்பத்தினருக்குத் தொலைபேசி மிரட்டல்கள் வந்ததால்தான், தாவூத் கும்பலிடமிருந்து ஏ-கே 56 இரக துப்பாக்கிகளை வாங்கி வைத்துக் கொண்டதாக'' ஒப்புக் கொண்டுள்ளார், நடிகர் சஞ்சய் தத்.

எனினும், இவர்கள் இருவரும் ஒரே மாதிரியாகத் தண்டிக்கப்படவில்லை. சாமானிய முசுலீமான குரேஷி காலாவதியாகிவிட்ட ''தடா'' சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டுள்ளார். பணபலமும், அரசியல் செல்வாக்கு மிக்க நடிகர் சஞ்சய் தத், ''தடா'' குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டு, ஆயுதச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார். அதேசமயம், சஞ்சய் தத்திடமிருந்த ஏ-கே. 56 இரகத் துப்பாக்கிகளை அழிக்க உதவியதற்காக, தத்தின் நண்பர்கள் மன்சூர் அகமதுவும், ஜாய்புன்னிஸா காசியும் ''தடா''வின் கீழ் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத் தாக்குதலையடுத்து, பாக். மீது போர் தொடுக்க இந்தியா முண்டா தட்டியபொழுது, மும்பய் குண்டுவெடிப்புக்குத் திட்டமிட்டுக் கொடுத்த தாவூத் இப்ராகிம், ''டைகர்'' மேமன் உள்ளிட்ட 20 பயங்கரவாதிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என மைய அரசு கூச்சல் போட்டது. ஆனால், அமெரிக்க நிர்ப்பந்தம் காரணமாக, போர் முஸ்தீபுகளுக்கு முற்றுப்புள்ளி விழுந்து, இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவு பேச்சுவார்த்தைகள் தொடங்கிய பிறகு, பயங்கரவாதிகளை ஒப்படைக்க கோருவதுகூட சம்பிரதாய நடவடிக்கையாக நீர்த்துப் போய்விட்டது. இதனால், மும்பய் குண்டு வெடிப்பு தீர்ப்பு, எய்தவனை விட்டு விட்டு அம்பை மட்டும் தண்டித்த கதையாக முடிந்துவிட்டது.

●●●

**இ**ந்து மதவெறி பயங்கரவாத நடவடிக்கைகளையும், அதற்கு எதிரான முசுலீம் தீவிரவாத நடவடிக்கைகளையும் பாரபட்சமாக நடத்துவது. ''சமூக நீதி'' மாநிலமாகக் கருதப்படும் தமிழகத்தில் கூட அம்மணமாக நடக்கிறது. 1997-ஆம் ஆண்டு இறுதியில்

**கோவை குண்டு வெடிப்பு வழக்கு விசாரணையின் மோசடிகளை அம்பலப்படுத்தி கோவையில் நடந்த கருத்தரங்கில் உரையாற்றும் மும்பய் உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி ஹாஸ்பெட் சுரேஷ்.**



**இந்து மதவெறிக் கும்பல் மட்டுமல்ல, எல்லா வண்ண ஓட்டுக் கட்சிகளும், அரசும், நீதிமன்றமும் கை கோர்த்துக் கொண்டு, முசுலீம்களுக்கு வாழ்வுரிமையையும், நீதியையும் மறுப்பதன் மூலம், அவர்களைத் தீவிரவாதத்தின் பக்கம் தள்ளி விடுகின்றன.**

கோவையில் ஆர்.எஸ்.எஸ். குண்டர்களும், தமிழக போலீசாரும் சேர்ந்து நடத்திய கலவரத்தில் 18 முசுலீம்கள் கொல்லப்பட்டனர்; 5 கோடி பெறுமான முசுலீம்களின் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன. இக்கலவரம் தொடர்பாக முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்யப்பட்டதற்கு மேல், வேறெந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வழக்கு விசாரணை நடந்து குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்பதற்கு எந்த அறிகுறியும் தென்படவில்லை.

அதேசமயம், இக்கலவரத்தின் எதிர்வினையாக நடந்த கோவை குண்டு வெடிப்பு வழக்கில் 180 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டு, 166 முசுலீம்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கு தொடர்பாக 1,300 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள 166 பேரில், 3 முசுலீம்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பாக, 1,300 சாட்சிகளுள் ஒருவர்கூட சாட்சியம் அளிக்கவில்லை. இதன் அடிப்படையில் தங்களை வழக்கில் இருந்து விடுவித்து, சிறையில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என அவர்கள் கோரியதை, கோவை குற்றவியல் நீதிமன்றம் எவ்விதக் காரணமும் கூறாமல் நிராகரித்துவிட்டது.

45 முசுலீம்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பாக, நான்கே நான்கு பேர்தான் சாட்சியம் அளித்துள்ளனர். இந்த நான்கு சாட்சியங்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இந்து முன்னணியின் உறுப்பினர்கள்.

இக்குண்டு வெடிப்பு தொடர்பாக கேரளாவைச் சேர்ந்த அப்துல் மதானி மீது, சதித் திட்டம் தீட்டியதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. ஆனாலும், அதற்கான சாட்சியம் நீதிமன்றத்தில் தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. இதையடுத்து, தனக்குப் பிணை வழங்காவிட்டாலும் கூட, கேரளத்தில் மருத்துவச் சிகிச்சை எடுத்துக் கொள்ள தன்னை அனுமதிக்க வேண்டும் என உச்சநீதி மன்றத்தில் மனு கொடுத்தார், அவர். மதானியின் மனுவை காது கொடுத்து விசாரிக்கக் கூட மறுத்து விட்டு, விசாரணையின்றியே தள்ளுபடி செய்தது, உச்சநீதி மன்றம்.

முசுலீம் 'தீவிரவாதி' மதானியிடம் இப்படி கறாராக நடந்து கொண்ட உச்ச நீதி மன்றம், பார்ப்பன பயங்கரவாதி ஜெயேந்திரர், சங்கரராமன் கொலை வழக்கில் தனக்குப் பிணை வழங்க வேண்டும் என முறையீடு செய்த பொழுது, அவ்வழக்கு தொடர்பாக போலீசு விசாரணை நடந்து கொண்டிருந்த பொழுதே, அவ்வழக்கில் அவர் மீது சுமத்தப்பட்ட சதிக் குற்றச்சாட்டில் இருந்தே அவரை விடுதலை செய்தது.

"மதானியை வெளியே நடமாட அனுமதித்தால், சட்டம் - ஒழுங்கு கெட்டுப் போய்விடும். எனவே, அவரைப் பிணையில்கூட வெளியே விடக் கூடாது" என அ.தி.மு.க. ஆட்சியின் பொழுது தனிஅரசாணை போடப்பட்டது. பார்ப்பன ஜெயா ஆட்சியில் போடப்பட்ட இந்த அரசாணை, சூத்திர தி.மு.க. ஆட்சியிலும் நீக்கப்படவில்லை.

கோவை குண்டு வெடிப்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள 26 வயது அப்பாஸுக்கு, சிறைச்சாலையில் அறுவைச் சிகிச்சை நடந்தது. அறுவைச் சிகிச்சைக்கு முன் அவருக்கு நடத்தப்பட்ட இரத்தப் பரிசோதனையில், அவர் எவ்வித நோய்த் தொற்றும் இன்றி உடல் நலத்தோடு இருப்பது உறுதி செய்யப்பட்டது. அறுவைச் சிகிச்சை முடிந்த பிறகோ, "எய்ட்ஸ்" நோயைத் தோற்றுவிக்கும் வைரஸ் கிருமிகள் அவரது இரத்தத்தில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனை அரசின் அலட்சியம் என்பதா, இல்லை பழி தீர்த்துக் கொள்ளும் வெறி என்பதா?

இந்தியக் குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இம்முசுலீம்கள் அனைவரின் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால்கூட, அவர்களுக்கு அதிகபட்சமாக 10 ஆண்டுகள் வரைதான் தண்டனை வழங்க முடியும். ஆனால், இவர்கள் இப்பொழுதே பிணை கூட கிடைக்காமல், ஏறத்தாழ ஒன்பது ஆண்டுகள் சிறையில் கழித்து விட்டனர். விசாரணையின்றித் தண்டிக்கப்பட்டுள்ள இந்த அரசு பயங்கரவாதத்தைச் சமூக நீதி என்பதா, இல்லை பார்ப்பன மனு நீதி என்பதா?

சமூக நீதிக் காவலர்கள் ஆட்சி புரியும் தமிழகமே இப்படியென்றால், இந்து ராஷ்டிரத்தின் ஆய்வுக்" கூடமான குஜராத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

இந்து மதவெறிக் கும்பல் மட்டுமல்ல, எல்லா வண்ண ஓட்டுக் கட்சிகளும், அரசும், நீதிமன்றமும் கை கோர்த்துக் கொண்டு, முசுலீம்களுக்கு, வாழ்வுரிமையையும், நீதியையும் மறுப்பதன் மூலம், அவர்களைத் தீவிரவாதம் பக்கம் தள்ளி விடுகின்றன. பிறகு, இதையே காரணமாகக் கூறி, இந்து மதவெறி பாசிசத்தையும், அரசு பயங்கரவாதத்தையும் இந்திய நாட்டின் மீதும், மக்களின் மீதும் கட்டவிழ்த்து விடுகின்றன

● குப்பன்

பாரபட்சமான மும்பய் குண்டு வெடிப்பு தீர்ப்பைக் கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டத்தின் பொழுது, போலீசாரால் இழுத்துச் செல்லப்படும் முசுலீம் பெண்.



www.padippakam.com



### சட்டங்கள், ஆணையங்கள், நடுவர்மன்றங்கள், திட்டங்கள்...


# அரசு தோட்டத்தில் விளைந்து கிடக்கும் ஏட்டுச் சுரைக்காய்கள்

1980-ஆம் ஆண்டு காடுகள் (பாதுகாப்பு) சட்டம் என்ற பெயரில் மத்திய அரசு ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றியது. அதன்படி 1980-ஆம் ஆண்டு அக்டோபர் 25-ஆம் தேதிக்கு முன்பிருந்து காடுகளில் வாழ்ந்து வருவதாக நிரூபிக்க முடியாதவர்கள் எல்லாம் "ஆக்கிரமிப்பாளர்கள்" என்று அறிவிக்கப்பட்டார்கள்.

அதைத் தொடர்ந்து, "ஆக்கிரமிப்பாளர்களை" எல்லாம் வெளியேற்றும்படிக் கோரி "சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்" எனப்படுவோர் உச்சநீதி மன்றத்தை அணுகினர். அதை ஏற்ற உச்ச நீதி மன்றம் 1980-க்குப் பிந்தைய எல்லா ஆக்கிரமிப்பாளர்களையும் வெளியேற்றும்படி உத்திரவிட்டது. அத்தீர்ப்பின் அடிப்படையில் 2002-2003 ஆகிய ஓராண்டில் 1.68 இலட்சம் குடும்பங்களை வாஜ்பாயி தலைமையிலான அரசாங்கம் வெளியேற்றியது.

பட்டியலினப் பழங்குடி மக்களின் வெளியேற்றத்தைத் தடுத்து நிறுத்தப் போவதாக வாக்களித்து ஆட்சிக்கு வந்த காங்கிரசு தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி - இடதுசாரிக் கூட்டணி ஆகியவை தமது குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் அவ்வாறான ஒரு அம்சத்தைக் குறிப்பிட்டிருந்தன. அதைத் தொடர்ந்து, காடுகளில் இருந்து பழங்குடி மக்கள் மற்றும் காடுகளைச் சார்ந்து வாழும் வனவாசிகளை வெளியேற்றுவதைத் தடுப்பது, அதற்காக அவர்களுக்கு காட்டு நிலங்கள் மற்றும் விளைபொருட்கள் மீதுள்ள 14 உரிமைகளை நிலைநாட்டுவது என்ற பெயரில் ஒரு மசோதாவை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கொண்டு வந்தது. "உண்மையில் அந்த மசோதா பழங்குடி மற்றும் காடுகளைச் சார்ந்து வாழும் மக்களை வெளியேற்றும் நோக்கத்தைக் கொண்டிருந்தது" என்கிறார்கள் காங்கிரசு தலைமையிலான அரசின் முக்கிய ஆதரவாளர்களான 'இடதுசாரி'க் கூட்டணியினர். முக்கியமாக நான்கு குறைபாடுகள் முதலில் கொண்டு வந்த மசோதாவில் இருந்தன. காடுகளில் வாழும் பழங்குடி அல்லாத மக்களின் உரிமைகள் சேர்க்கப்படவில்லை; காடுகளில் வாழும் பழங்குடி அல்லாத மக்கள் உரிமை பெறுவதற்குத் தகுதியானவர்களாகக் கருதப்படும் காலவரையறை; கிராமமக்கள் சபையின் பாத்திரம் குறிப்பிடப்படவில்லை; காடுகளில் வாழும் மக்கள் விவசாயம் செய்வதற்காக 2.5 ஹெக்டேர் என்ற உச்சவரம்பு.

மத்தியப் பிரதேச மாநிலத்தின் - பாலாகாட் மாவட்டத்தில் பழங்குடியினர் வாழ்ந்துவந்த வனப்பகுதியை அழித்து, உருவாக்கப்பட்ட மலஞ்ஜகண்ட் சுரங்கம்.



இந்தக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி ஐ.மு.கூட்டணி அரசு கொண்டு வந்த மசோதாவை நாடாளுமன்றக் கூட்டுக் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பக் கோரி, இடதுசாரிக் கூட்டணி அதில் வெற்றியும் கண்டது. அதன்படி அமைக்கப்பட்ட கமிட்டி, பழைய மசோதாவின் மீது ஏழு பரிந்துரைகளை முன் வைத்தது. நாடாளுமன்றக் கூட்டுக் கமிட்டியின் பரிந்துரைகளை அப்படியே ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, அவற்றை அமைச்சர்கள் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியது, ஐ.மு.கூட்டணி அரசு.

நாடாளுமன்றக் கூட்டுக் கமிட்டியின் பரிந்துரைகளை அடிப்படையிலேயே நிராகரித்து விட்டு, காட்டிலாகா அதிகார வர்க்கம், அந்நிய - பன்னாட்டுத் தொழில் கழகங்கள் மற்றும் உள்நாட்டுத் தரகு முதலாளிகள் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் பல திருத்தங்களை அமைச்சர்கள் குழு புகுத்தியது. "பழங்குடியினர் மற்றும் பாரம்பரியமாக வனத்தைச் சார்ந்து வாழும் மக்களின் (காடுகளின் மீதான உரிமைகளை அங்கீகரிக்கும்) சட்டம் 2006" என்று பெயரிடப்பட்டிருக்கும் இச்சட்டத்தில் உள்ள பெயரளவிற்கான உரிமைகளையும் நீர்த்துப் போகச் செய்யும் வகையில் அமைச்சர்கள் குழுவின் திருத்தங்கள் அமைந்துள்ளன.

இடதுசாரிக் கூட்டணிக் கட்சிகளின் முயற்சியால் கொண்டு வரப்பட்டுள்ள இச்சட்டம் பழங்குடி மக்களின் வாழ்வில் 'ஒரு திருப்பு முனை' என்று பீற்றிக் கொள்ளும் போலி மார்க்சிஸ்டுகள், விதிகள் உருவாக்கப்படும்போது இதிலுள்ள குறைபாடுகள் சரி செய்யப்படுவதற்கான வாய்ப்பிருக்கிறது

www.padippakam.com

என்று வாக்குறுதியளிக்கின்றனர். மக்களுக்குச் சாதகமான இச்சட்டத்தை விரைவில் அமலபடுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு, மலைவாழ் மக்களிடையே இச்சட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, பழங்குடி மக்களின் நில உடைமையைப் பாதுகாப்பதற்காகப் பாடுபட வேண்டும்; இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பழங்குடி மக்களின் மத்தியில் இடதுசாரி சக்திகளின் வலுவைக் கூட்டி அமைப்பை விரிவுபடுத்த வேண்டும் என்றும் சவடால் அடிக்கின்றனர்.




பழங்குடியினர் வனப்பகுதியில் நுழைவதற்கும், வசிப்பதற்கும் பல கட்டுப்பாடுகளை விதிக்கும் அரசு, சுற்றுலா என்ற பெயரில் அந்நியர்களைப் பாக்கு-வெற்றிலை வைத்து அழைக்கிறது.

ஆனால், ஆளும் வர்க்கங்களும் அவர்களின் அரசியல் பிரதிநிதிகளும் போலி மார்க்சிஸ்டுகளைவிட மிகவும் புத்திசாலிகள் மட்டுமல்ல, தந்திரசாலிகளாகவும் உள்ளனர். ஏகாதிபத்திய சேவை செய்வதையே தேசிய நலன்களுக்கான செயல்கள் என்றும், தமது சொந்த நலன்களையே பொதுமக்கள் நலன்களுக்கானவை என்றும் பசப்பி ஏய்ப்பதில் வல்லவர்கள். அவ்வாறுதான் பழங்குடிகள் மற்றும் பாரம்பரியமாகக் காடுகளைச் சார்ந்து வாழும் மக்களின் காடுகள் மீதான உரிமைகளை அங்கீகரிப்பதாகப் பெயர் கொண்ட இப்புதிய சட்டத்திலும் பல சட்டநுட்பத் தில்லுமுல்லுகளைச் செய்துள்ளனர்.

எடுத்துக்காட்டாக 1980-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட காடுகள் (பராமரிப்புச்) சட்டப்படி அந்த ஆண்டு அக்டோபர் 25-ந் தேதிக்கு முன்பிருந்து காடுகளில் வாழ்ந்து வருவதாக நிரூபிக்க முடியாத வனவாசி மக்கள் ஆக்கிரமிப்பாளர்களாகக் கருதப்பட்டு வெளியேற்றப்படுவர். தற்போதைய சட்டம் இந்தக் கால வரையறையை 2005, டிசம்பர் 13 ஆக மாற்றியிருக்கிறது. காடுகளில் வாழும் பட்டியலினப் பழங்குடிகள் அல்லாத மக்களுக்கும் இது பொருந்தும் என்றும், ஆகவே இச்சட்டம் முற்போக்கானதென்றும் நம்பச் சொல்கிறார்கள். ஆனால், ஒரு தலைமுறை என்பது 25 ஆண்டுகள் வீதம் மூன்று தலைமுறைகளாகப் பாரம்பரியமாகக் காடுகளில் தாங்கள் வாழ்ந்து வருவதாக அம்மக்கள் நிரூபித்தாக வேண்டும். அதாவது 1930 முதல் 75 ஆண்டுகள் காடுகளில் வாழ்ந்து வந்திருப்பதாக நிரூபிப்பவர்கள் மட்டுமே இச்சட்டத்தின்படி உரிமைகள் பெற முடியும். வாய்வழிச் சாட்சியங்களோ, நேரடி சோதனை ஆதாரங்களோ போதாதவை; காலனிய கால ஆவணங்களை வைத்து நிரூபித்தாக வேண்டும். இவ்வாறான கறாரான வரையறை மூலம் பெரும்பாலான மக்களின் வன உரிமைகள் நிராகரிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

அடுத்து, ஐ.மு.கூட்டணி அரசு முதலில் முன் வைத்த நகல் சட்ட மசோதா, பட்டியலினப் பழங்குடி மக்களின் உரிமைகள் பற்றி மட்டுமே பேசியது. பின்னர்தான் அப்பழங்குடி மக்கள் அல்லாத பாரம்பரியமாகக் காடுகளில் வாழும் மக்கள் உரிமைகள் என்று சேர்க்கப்பட்டது. இது இடதுசாரிக் கட்சிகளின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்ட முற்போக்கான அம்சம் என்று போலி மார்க்சிஸ்டுகள் கொண்டாடுகின்றனர். ஆனால், காடுகளில் தங்கள் கால்நடைகளை மேய்த்து வாழும் குஜ்ஜார் போன்ற பழங்குடிகள் அல்லாத மக்கள், காடுகளின் விளிம்புகளில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் பல தலைமுறைகளாக காடுகளில் விவசாயம் செய்தும், பீடி, இலை, விறகு பொறுக்கி வாழும் ஏழை எளிய மக்கள் என ஏராளமான மக்கள் காடுகளைச் சார்ந்து வாழுகிறார்கள். ''பாரம்பரியமாகக் காடுகளில் வாழும் பட்டியலினப் பழங்குடிகள் அல்லாத மக்கள்'' உரிமைகள் பற்றி இச்சட்டம் பேசுவதால் இது முற்போக்கானதென்று யாரும் நம்பிவிட வேண்டாம். ஏனெனில் ''காடுகளில் வாழும் மக்கள்'' என்ற சொல்லுக்குக் ''காடுகளில் உள்ளே வாழும் மக்கள்'' என்று இறுதியாக நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் ஐ.மு.கூட்டணி அரசு திருத்தம் செய்திருக்கிறது. இதன் மூலம் காடுகளையொட்டி அவற்றின் விளிம்பில் வாழும் மக்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இதனால் அரசு ஆவணங்களில் பதிவு செய்யப்பட்ட 3000 கிராமங்கள் தவிர பதிவு செய்யப்படாத காட்டுப்பகுதி கிராமங்களில் வாழும் மக்களுக்கு வன உரிமைகள் மறுக்கப்படுவதாகிறது.

''அரசினால் காடுகளில் குடியமர்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்'' என்று பழங்குடி மக்கள் விவகார அமைச்சர் வெறுமனே வாக்களித்துள்ளார். ஆனால், சட்டத்தில் அப்படி இல்லை. மேலும், ''காடுகளுக்கு வெளியே வாழ்ந்தாலும், காடுகளுக்குள்ளே நில உடைமை வைத்துள்ளவர்கள் அதன் மீது உரிமை கொண்டாட முடியும்'' என்று அமைச்சர் விளக்கமளித்துள்ளார். இதன்மூலம் வெளியூரில் வாழும் நிலப்பிரபுக்கள் கூட 'தமது' நிலத்தின் மீது உரிமை பாராட்டமுடியும். அதேசமயம், காடுகளின் விளிம்பில் வாழும் கூலி-ஏழை-நிலமற்ற விவசாயிகளோ, தாழ்த்தப்பட்ட மக்களோ அவ்வாறு செய்ய முடியாது என்றாகிறது.

மேலும், பட்டியலினப் பழங்குடி மக்கள் மற்றும் அவர்கள் அல்லாத, பாரம்பரியமாக காடுகளில் வாழும் மக்களுடைய கிராம சபை பற்றிய வரையறுப்பையும், அவற்றின் அதிகாரங்களையும் இறுதிச் சட்டம் மாற்றித் திருத்தி அமைத்து விட்டது. ''மலைவாழ் மக்களின் குடியிருப்புப் பஞ்சாயத்து'' அடிப்படையிலான கிராம சபை என்பதற்கு பதிலாக, அதிகாரவர்க்கம் மற்றும் மேல்சாதி மக்களின் கட்டுப்பாட்டில் வரும் வருவாய்த் துறை பஞ்சாயத்துக்களே கிராம சபைகள் என்று வரையறுத்து, இந்த வகை கிராமப் பஞ்சாயத்துக்களின் முடிவே கணக்கில் கொள்ளப்படும் என்று மாற்றி அமைத்து விட்டது. நிறைவேற்றப்பட்ட சட்டம், இடம் மாறி விவசாயம் செய்வதற்கான உரிமை, காடுகளின் சிறு விளைபொருட்களைப் பயன்படுத்தும் உரிமை, அவற்றின் விலை நிர்ண

www.padippakam.com

யம். காடுகள் அல்லாத தேவைகளுக்குக் காடுகளைப் பயன்படுத்துவது போன்ற முடிவுகளை பாரம்பரிய கிராமப் பஞ்சாயத்துக்கள் தீர்மானிக்க முடியாது. அரசு அதிகாரிகளும், மூன்று வருவாய்த்துறை பஞ்சாயத்துத் தலைவர்களும் கொண்ட துணைக் கோட்டக் கமிட்டிதான் மேற்படி முடிவுகளை எடுக்கும் அதிகாரம் கொண்டவை.

காடுகளில் கிடைக்கும் சிறு விளை பொருட்களைப் பட்டியலினப் பழங்குடி மக்களும் பாரம்பரியமாக காடுகளில் வாழும் பழங்குடிகள் அல்லாத மக்களும் பயன்படுத்தும் உரிமை இருப்பதாகக் கூறினாலும், விறகு, மூங்கில், கற்கள் மற்றும் பல்வேறு வகை இலைகள் இவ்வாறு பயன்படுத்தப்படுவதில் இருந்து தடைவிதிக்கப்பட்டுள்ளன. அதேபோல, இடம் பெயர்ந்து விவசாயம் செய்வதற்கான உரிமை வழங்குவதாகக் கூறினாலும் அந்நிலங்களின் பல்வேறு பயன்பாடுகளுக்குக் கடுமையாகத் தடை விதித்துள்ளது. காடுகளில் உள்ள தேசியப் பூங்கா மற்றும் பலவகை விலங்கு - பறவை சரணாலயங்களில் இருந்து சிறு விளைபொருட்களை எடுத்துச் செல்வதற்கும் பல தடைகள் விதித்துள்ளது.

காடுகள் மற்றும் அவற்றின் விளிம்புகளில் நிறைவேற்றப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மீதும் பாரம்பரிய கிராம சபைக்கு அதிகாரம் கிடையாது. அரசு அதிகார வர்க்கத்தின் ஆதிக்கத்திலுள்ள வருவாய்த்துறை பஞ்சாயத்துகளுக்கே அதிகாரம் உள்ளது; அதேபோன்று அங்குள்ள தேசிய பூங்கா, பறவைகள் - வனவிலங்குகள் சரணாலயம் பற்றிய முடிவுகள் எடுப்பது; அவற்றைச் சாக்கு வைத்து பழங்குடி மக்கள் மற்றும் பழங்குடியினர் அல்லாத பாரம்பரிய கிராம மக்களை இடமாற்றம் செய்வது, மறு குடியேற்றங்கள் நிறுவுவது போன்றவற்றுக்கான அதிகாரமும் அரசு அதிகார வர்க்கத்திடமே ஒப்படைக்கப்படுகிறது.

காடுகள் அல்லாத தேவைகளுக்கு காடுகளில் உள்ள நிலங்களைப் பயன்படுத்துவது குறித்த முடிவையும் அரசு அதிகார வர்க்கமே செய்யும். இது தவிர, காடுகளைப் பராமரித்து நிர்வகிக்கும் அதிகாரம் தொடர்ந்து வழமையான காட்டிலாகா அதிகார வர்க்கத்திடமே நீடிக்கும். இந்த நிர்வாகக் கட்டமைப்பைக் கலைக்காமல், பட்டியலின பழங்குடி மக்கள் மற்றும் பழங்குடியினர் அல்லாத பாரம்பரிய காட்டுவாசிகள் உரிமை பற்றிப் பேசுவதெல்லாம் வெறும் கண்துடைப்பு வேலைதான்.

காடுகளையும் மலைகளையும் அவற்றின் வளங்களையும் அந்நியப் பன்னாட்டு முதலாளிகளுக்கும், உள்நாட்டுத் தரகு முதலாளிகளுக்கும் தாரை வார்ப்பதைக் கண்டு பழங்குடி மக்களும் காடுகளைச் சார்ந்து வாழும் மக்களும் கொதித்தெழுந்து போராடுவதைத் தடுப்பதற்கே, மக்களின் காடுகள் உரிமைச் சட்டம் என்ற பெயரில் மோசடியானதொரு சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

(தொடரும்)

# "நாட்டின் விடுதலையும் மகளிர் விடுதலையும் பிரிக்க முடியாதவை!"

அனைத்துலக மகளிர் தினமான மார்ச் 8-ஆம் நாளன்று திருச்சியில் செயல்பட்டு வரும் பெண்கள் விடுதலை முன்னணி, இப்போராட்ட நாளில் மறுகாலனிய அடிமைத்தனத்தை வீழ்த்த உறுதியேற்று, கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் சங்க மண்டபத்தில் அரங்கக் கூட்டத்தை நடத்தியது. தோழர் நிர்மலா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், மதுரை மையம் வீதி நாடக இயக்கத்தைச் சேர்ந்த தோழர் தேவி, சென்னை ம.க.இ.க. தோழர் துரை.சண்முகம் ஆகியோர் உழைக்கும் பெண்கள் எதிர்கொள்ளும் சமூகக் கொடுமைகள் - தடைகளையும், அடிமைப்பட்ட மண்ணை மீட்க விடுதலைப் போரைத் தொடுப்பதன் மூலமே பெண்ணடிமைத்தனம் உள்ளிட்ட அனைத்தையும் வீழ்த்த முடியும் என்பதையும் விளக்கிச் சிறப்புரையாற்றினர். ஓராண்டுக்கு முன் இதே நாளில் இவ்வமைப்பு தொடங்கப்பட்டு, குறுகிய காலத்திலேயே பல போராட்டங்களில் ஈடுபட்ட அனுபவங்களைத் தொகுத்த தோழர் நிர்மலாவின் உரைக்குப் பின், புதிய நிர்வாகிகள் தேர்வும் அதைத் தொடர்ந்து புரட்சிகர கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கோவில்பட்டியில் இயங்கிவரும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் இணைப்புச் சங்கமான தீப்பெட்டி தொழிலாளர் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பில், 11.3.07 அன்று உமா திருமண மண்டபத்தில் அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி தோழர் அனுசியா தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய "மூட்டா" சங்கத் தலைவரும் ஜி.வி.என். கல்லூரிப் பேராசிரியருமான உமாதேவி, திராவிடர் கழக மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் தமிழரசி மற்றும் பு.ஜ.தொ.மு. அமைப்பாளர் தோழர் முருகன் ஆகியோர், தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தின்மூலம் பெண் விடுதலை சாத்தியமில்லை என்பதையும், நாட்டின் மீதும் மக்களின் மீதும் மறுகாலனிய அடிமைத்தனமும் உழைப்புச் சுரண்டலும் திணிக்கப்பட்டுள்ள நிலையில் ஆண்களோடு இணைந்து உழைக்கும் பெண்கள் போராடுவதன்மூலமே பெண் விடுதலையைச் சாதிக்க முடியும் என்பதையும் எடுத்துரைத்தனர்.


கோவில்பட்டியில்...

பள்ளி-கல்லூரி மாணவிகளின் கவிதை வாசிப்பு, சிறுவர்களின் கலை நிகழ்ச்சியுடன் நடந்த இந்தக் கருத்தரங்கம் குடும்பத்தோடு திரண்டு வந்திருந்த பெண் தொழிலாளர்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்தது.

*- பு.ஜ. செய்தியாளர்கள்.*


படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

பொதுக்கூட்டத்திற்கு பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் அ.முகுந்தன் தலைமை வகித்தார். ம.க.இ.க. மாநில இணைச்செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரை ஆற்றினார். காய்கறி வியாபாரிகள் சங்கத் தலைவர் ஜி.டி.இராசசேகரன், சிறுகடை வியாபாரிகள் சங்கத் தலைவர் அண்ணாமலை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தொழிலாளர் விடுதலை முன்னணித் தலைவர் செங்கோவலர் அரசன், சுமை தூக்கும் கூலித் தொழிலாளி சிவக்குமார் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.



சென்னை - கோயம்பேடு மார்க்கெட்டைச் சேர்ந்த காய்கறி - பழ வியாபாரிகள் ரிலையன்ஸை வெளியேறக் கோரி நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம்.

அரசின் வஞ்சகமான திட்டத்தின்படி, 'இடைத்தரகு வியாபாரிகள்' நீக்கப்பட்டு, பகாசுர முதலாளியான ரிலையன்சிடமும், பன்னாட்டு முதலாளியான வால்மார்ட்டிடமும் வியாபாரச் சூத்திரக் கயிறு கொடுக்கப்படுமானால், விவசாயிகள், வியாபாரிகள், கூலிகள் எல்லோருமே ஒட்டு மொத்தமாய்க் குப்பையாக வீசியெறியப்பட்டு விடுவார்கள் என்று விளக்கி எச்சரித்த தோழர் காளியப்பன், நேற்றுவரை நம்மோடு பழகிய சிறு வியாபாரிகளை வீதியில் விட்டுவிட்டு, புதிதாக குஜராத்திலிருந்து வந்த தரகு முதலாளி ரிலையன்ஸ் அம்பானியோடு உறவு வைக்கத் தொடங்குவது என்ன ஒழுக்கம், அது ஆபத்தல்லவா என்று மத்தியதர வர்க்கத்தை நோக்கி நச்சென்று கேள்விகளை வீசினார்.


அடுத்துப் பேசிய கூலித் தொழிலாளி சிவக்குமார் தன் வர்க்கத்துக்கேயுரிய கோபத்தோடு தங்கள் வாழ்க்கையைப் படுகுழியில் தள்ளியிருக்கும் ரிலையன்சை அடித்து விரட்ட வேண்டும் என்று பேசினார்; தொழிலாளர் விடுதலை முன்னணித் தலைவர் செங்கோவலர் அரசன், கோயம்பேடு நிலைமையை மாற்றப் போராட்டம் அவசியம் என்று விளக்கிவிட்டு, ரிலையன்ஸை நுழையவிட்ட கட்சிகளின் பின்னால் தன் கட்சித் தலைவர்களே எப்படிச் சென்றார்கள் என்று கேள்வி எழுப்பினார். சிறு கடை வியாபாரிகள் சங்கத் தலைவரான அண்ணாமலை எளிய வாதங்களை முன்வைத்து ஆளுங்கட்சித் தலைவர்களை நோக்கிக் கேள்விகளை வீசிய போது கைத்தட்டலால் கூட்டம் ஆர்ப்பரித்தது.

கூட்ட இறுதியில் நடந்த ஒரு மணிநேரக் கலைநிகழ்ச்சியில் ஒரு புதிய போராட்டக்கலை அங்கே பிறந்ததைக் கண்ணெதிரே கண்டனர் சுமார் 1500-க்கும் மேல் திரண்டிருந்த உழைப்பாளிகள். ''ஓரம் ஓரம் ஓரம் - அவன / விரட்ட வேணும் தூரம்/ சொல்லி அடங்கலேன்னா, தயங்காதே, / அழுத்தி ஊக்கில் போடு'' என்ற பாடலை மையக் கலைக்குழு பாடியபோது, அதைப் போராட்ட அச்சாரமாக எடுத்துச் சென்றார்கள் உழைக்கும் கூலிகள்.

மார்ச் 23 - பகத்சிங் நினைவு நாளன்று ஜெ.ஜெ. நகர் ரிலையன்ஸ் ஃப்ரெஷ் கடை அருகே இப்புரட்சிகர அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 50க்கும் மேற்பட்ட தோழர்கள் திரண்டு - செங்கொடிகள், போராட்ட முழக்கத் தட்டிகளோடு வீதியில் நின்று - சுமார் 3 மணி நேரம் ஆர்ப்பாட்டம் செய்தனர். வீதியோடு சென்ற தள்ளுவண்டி வியாபாரிகளும் இந்த ஆர்ப்பாட்டத்தில் வந்து கலந்து கொண்டனர்.

சென்னைக்கும் படை எடுத்து வந்து கடை திறந்திருக்கும் ரிலையன்ஸை எதிர்த்து கோயம்பேடு வணிக வளாகத்தின் ஆயிரக்கணக்கான வியாபாரிகள் - கூலித் தொழிலாளர்கள் அதே நாளில் போர்க்கோலம் பூண்டனர். தமிழகத்தில் பல லட்சம் சிறு வியாபாரிகள், கூலித் தொழிலாளரின் வாழ்வைச் சூறையாட வந்துள்ள ரிலையன்ஸைத் தமிழகத்தைவிட்டே விரட்டியடிக்க வேண்டும் என்று போராட்டம் கூர்மைப்பட்டிருந்தது. அதேநாளின் பிற்பகலில் கோயம்பேடு வணிகவளாகத்தில் சிறு வியாபாரிகளும், கூலித் தொழிலாளர்களும் நடத்திய உண்ணாவிரதக் கூட்டத்தில் தோழர்கள் திரளாகப் பங்கேற்றனர். தோழர் அ.முகுந்தன் அங்கு எழுச்சி உரை ஆற்றினார்.

ரிலையன்ஸ் நிறுவனத்தை எதிர்த்த போராட்டத்தின் ஒரு பகுதியாக, ம.க.இ.க. மையக் கலைக் குழுவினர் கோயம்பேடு மார்க்கெட் வளாகத்தினுள் நடத்திய பிரச்சார - கலை நிகழ்ச்சி.



''ரிலையன்ஸை ஓட ஓட விரட்டியடிப்போம்!'' என்று தொடங்கியுள்ள இவ்வமைப்புகளின் வீச்சான ஒருவாரப் பிரச்சாரமும் சில்லறை வியாபாரிகள் - தொழிலாளர்களின் போராட்டமும் முடியவில்லை; இது ஒரு தொடக்கம்; மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான போரின் ஒரு சிறு பொறி; இது காட்டுத் தீயாக நிச்சயம் பரவும்!

**தகவல்:** ம.க.இ.க., சென்னை.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# மக்களைக் கொல்லும் விலைவாசி உயர்வு!
# மறுகாலனியாக்கக் கொள்கையின் விளைவு!

விலைவாசி உயர்வுக்கு எதிராக
தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகள்
15.3.07 அன்று நடத்திய

# ஆர்ப்பாட்டம்

- நாடு முன்னேறுதுன்னு ஜம்பமடிக்கிற -ஏண்டா
  விலைவாசி ஏறுதுண்ணா பம்மி பதுங்குற?
- ஆடம்பரக் கார் விலை குறையுது - ஆனா
  அரிசி பருப்பு விலை மட்டும் ஏறுது!
- ஆன்லைன் வர்த்தகமுன்னு பேரு - அதில
  அடிக்கிறான் கோடி பல நூறு!
- சோறு வேறு சுதந்திரம் வேறு ஆகுமா - நாடு
  அடிமையாக உள்ளபோது விலைவாசிதான் குறையுமா?
- ஓட்டுக் கட்சி அத்தனையும் பிராடு!
  நாட்டு விடுதலைக்கு ஒண்ணா சேர்ந்து போராடு!



ஓசூரில்...





விழுப்புரத்தில்...


பென்னாகரத்தில்...


திருச்சியில்...



சிவகங்கையில்...



கோவையில்...





உசிலம்பட்டியில்...


சென்னையில்...